குழந்தைகள் இயேசுவுக்கே



ஞாயிறு பள்ளி ஆசிரியர் கையேடு -V

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக *(மத்தேயு 10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

நமது பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்ட தேவ பாலகன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

நமது தேவாதி தேவனின் திருவருளால் நமது ஞாயிறு பள்ளி பாடத்திட்டம் இந்த வருடமும் சிறப்பாக வெளி வந்துள்ளது. கடந்த வருடத்திற்கான பாடத்திட்டத்தை அநேகர் பயன்படுத்தி, பயன்அடைந்ததற்காக தேவனை துதிக்கிறோம். வேதத்தை பிள்ளைகளுக்கு முறையாகவும், தொடர்ச்சியாகவும் கற்றுக் கொடுப்பதற்கு இந்தப் பாடத்திட்டம் உங்களுக்கு துணை புரியும் என்பதில் சந்தேகமே இல்லை. இதில் கொடுக்கப்பட்டிருக்கும் வேதாகம சம்பவங்களையும், கதைகளையும் நன்கு வாசித்து ஜெபத்துடன் ஆயத்தப்பட்டு, கொடுக்கப்பட்டிருக்கும் நோக்கம் பிள்ளைகள் மனதில் பதியும் படி அவர்களுக்கு கற்றுக் கொடுங்கள்.

'இன்றைய சிறுவர்கள் நாளைய சமுதாயத்தின் சிற்பிகள்'. வருங்காலத்தில் சிறந்த சிற்பிகள் உருவாகிட இன்றைய சிற்பிகளாகிய நீங்கள் சிறப்பாய் ஜெபத்துடன் செயல்படுங்கள். அவ்விதமாய் நீங்கள் செயல்படுவீர்களானால், பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். இந்த சிறுவர் ஊழியத்தில் உங்களை இணைத்திட்ட நீங்கள், சிறப்பாய் செயல்படுவதற்கு தேவ ஆவியானவர் தாமே உங்களுக்கு துணை செய்வாராக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
உங்கள் அன்பு சகோதரி
Mrs. Esther Anandaraj
(Mrs. Esther Anandaraj)

தயாரிப்பில் உதவி :

திருமதி. **விக்டோரியா ரிச்சர்ட்சன்,** நெல்லை
திருமதி. **ஹைமா ஸ்டீபன்,** நெல்லை
திரு. **எமில்ராஜ் மோசஸ்,** ஆரைக்குளம்.

A. Baskar Paul.

CFJ ஞாயிறு பள்ளி பாடத்திட்டம்

பாடம் 1 : ஆதித்திருச்சபைக்கு ஆவியானவர்

நோக்கம் : பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கும்போது நாம் தைரியமுள்ள சாட்சிகளாக இருக்க முடியும்.

மனப்பாட வசனம் : அப் 1: 8

கதை :

"டேய் டிங்கி விஷயத்தை கேட்டியா, நம்ம தினமும் விளையாடும் இடத்துல ஓர் சிறுத்தைபுலி பதுங்கி இருந்து நம்ம இனத்தை சேர்ந்த குரங்குகளை புடிச்சி தின்னுடுது" என்று குட்டி குரங்கு மிசா படபடப்புடன் கண்களில் பயத்துடன் கூறியது. திடீரென்று பிங்கி குரங்கு ஓடி வந்து மூச்சிறைக்க டிங்கி, மிசாவுக்கு முன்பாக நின்று கண்களில் கண்ணீர் ததும்ப தழுதழுத்த குரலில் "டிங்கி அண்ணா... சிறுத்தைபுலி. நான் விளையாடும் போது பதுங்கி வந்து தாக்கியது. அதின் கை என் மீது பட்டுது. அதின் நகம் என் முதுகில் கீறி இரத்தம் வருது. இதுக்கு ஓர் முடிவு பண்ணனும். அந்த சிறுத்தை புலியையும் அந்த கூட்டத்தையும் அழிக்கணும் அண்ணே" என்று மயங்கி அங்கேயே விழுந்தது. இதை கண்ட டிங்கியின் உள்ளம் உடைந்தது. தான் எப்படியாவது இதற்கு முடிவு காணவேண்டும் என்று எண்ணியது. ஆனால் நானும் ஓர் குரங்கு தானே என்று எண்ணியது. அப்போது தான் டிங்கிக்கு ஓர் ஞாபகம் வந்தது. ஆமா நம்ம சிநேகிதர் "லிபோ யானை" யை கூட்டி போனால் சிறுத்தையை வெல்லலாம் என்று நினைத்து டிங்கி, யானையின் உதவியை கேட்டது. அடுத்த நாள் டிங்கி விளையாடுவது போல் விளையாட்டு மைதானத்தில் நடித்தது. பதுங்கியிருந்த சிறுத்தை புலி டிங்கி மீது பாய மறைவில் இருந்த "லிபோ யானை" சிறுத்தை புலியை ஓர் மிதி மிதித்தது. சிறுத்தை புலி நசுங்கி இறந்தது. குரங்குகளுக்கு விடுதலை கிடைத்தது.

வேத கதை : அப் 2 : 1- 41

மக்களோடு மக்களாக வாழ்ந்து, அநேக உபதேசங்கள் சொல்லி அற்புத அடையாளங்களைச் செய்து வந்த இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். இது அப்போஸ்தலர்களை கவலையில் ஆழ்த்தியது. ஆனால் மீண்டும் உயிரோடு எழும்பி அவர்களை சந்தோஷப்படுத்தினார். ஆனாலும், அந்த சந்தோஷம் அநேக நாட்கள் நீடிக்கவில்லை. அவர் வானத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார். ஆனாலும் தன் பிரிவால் வாடுபவர்களுக்கு

பரிசுத்த ஆவியை அருளிச்சென்றார். பெந்தேகொஸ்தே என்னும் நாளில் சீஷர்களும் அப்போஸ்தலர்களும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் கூடி இருந்தபோது பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். பரிசுத்த ஆவியை பெற்ற அவர்களுக்குள் தைரியம் வந்தது. பேதுரு எழுந்து தன் முதல் பிரசங்கத்தை நிகழ்த்தினார். 3000 பேர் அன்றைய தினம் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

திருப்புதல்:

- ※ சீஷர்கள் என்றைக்கு ஓரிடத்தில் கூடினார்கள்? (1)
- ※ பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டவர்கள் என்ன செய்ய தொடங்கினார்கள்? (4)
- ※ இதைக் கேட்ட திரளான ஜனங்கள் ஏன் கலக்கம் அடைந்தார்கள்? (6)
- ※ யாருடைய தீர்க்கதரிசனம் நடந்தேறியது? (16)
- ※ எப்பொழுது பரிசுத்த ஆவியின் வரம் கிடைக்கும் என்று பேதுரு கூறினார்? (38)
- ※ பேதுருவின் முதல் பிரசங்கத்தில் இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்? (41)

கருத்து:

உலக மனிதர்களுக்கு பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிற உங்களுக்கு பெலத்தையும், தைரியத்தையும் கொடுக்கும் பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்ளுங்கள்.

✱✱✱✱✱

பாடம் 2 : நோக்கிப் பார், இரட்சிப்பார்

நோக்கம்: இயேசு கிறிஸ்துவின் நாமம் வல்லமை உள்ளது.

ம. வசனம்: செப்பனியா 3 : 17

கதை:

செல்லையா என்றொரு தம்பி இருந்தான். அவன் சிறு வயது முதலே நன்றாக ஜெபித்து வேதம் வாசித்து இயேசப்பாவுக்கு சாட்சியாய் வாழ்ந்தான். அவன் 9ம் வகுப்பு படிக்கும் போது ஒரு நாள் அவன் வீட்டில் தாய்மார் கூட்டம் நடந்தது. அவனுடைய தாயாரும் மற்றும் சில தாய்மாரும் ஜெபித்துக் கொண்டிருந்தனர். செல்லையா தம்பி ஜெபிக்கும் தருணத்தில் திடீரென்று ஏதோ அலறல் சத்தம் கேட்டது. செல்லையா இறுக கண்களை மூடி ஜெபிக்க அலறல் சத்தம் அதிகமானது. ஜெபத்தை முடித்து கண்களை திறந்து பார்த்தால் வீட்டில் ஒருவர் கூட இல்லை. தலைவிரி கோலத்துடன்

ஆடிய அந்த அசுத்த ஆவியை உடைய ஒரு தாயாரை தவிர. செல்லையாவால் அதற்கு மேல் ஜெபிக்க முடியவில்லை. இதயம் படபடத்தது. அந்த அசுத்த ஆவி தம்பியையே உற்று பார்த்து கொண்டிருந்தது. தாய்மார்கள் ஜன்னல் வழியாக என்ன நடக்கிறது என்று பார்த்துக் கொண்டிருந்தனர். சிறிது நேரம் கழித்து அந்த அசுத்த ஆவி பிடித்த பெண்மணி தனது முடியை சரிசெய்து எழுந்து சென்றாள். வெளியில் இருந்து ஓடி வந்த தாய்மார் தம்பி அந்த அசுத்த ஆவி உன்னை பார்த்து என்ன சொன்னது என்று கேட்டனர். அதற்கு செல்லையா இந்த மாதிரி விசுவாசம் இல்லாத தாய்மாரோடு சேர்ந்து இனி ஜெபிக்காதே என்று சொன்னது என்று கூறினான்.

செல்லையா அடுத்த மூன்று நாள் உபவாசம் இருந்து ஜெபம் செய்தான். தன்னுடைய தாயாரை அனுப்பி அந்த அசுத்த ஆவி பிடித்த தாயாரை அழைத்து வர கூறினான். இயேசுவின் நாமத்தினால் வெளியே போ பிசாசே என்று வல்லமையோடு கூறினான். பிசாசு அலறி ஓடி அந்த பெண்மணி சுகமானாள். இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இருக்கின்றது என்று அறிந்தான். இயேசுவின் வல்லமை ஊழியங்களை செய்யும் வல்லமையுள்ள ஊழியக்காரனாக உயர்ந்தான்.

வேத கதை: அப் 3:1-26

ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணி நேரத்திலே பேதுருவும் யோவானும் தேவாலாயத்திற்கு போனார்கள். அங்கே ஒரு பிறவி சப்பாணி பிச்சை எடுத்துக்கொண்டிருந்தான். பேதுரு அவனைப் பார்த்து "வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லை. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட" என்றார். அவன் சுகமானான். இதனைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர். உடனே பேதுரு ஜனங்களிடம் 'இதை குறித்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதென்ன? நாங்கள் எங்கள் சுய சக்தியினால் இவனை நடக்கப்பண்ணவில்லை. இயேசு கிறிஸ்துவின் வல்லமை யுள்ள நாமத்தினாலே இது நடந்தது என்றார்.

திருப்புதல்:

* ஜெபவேளையில் தேவாலயத்திற்கு போனவர்கள் யார்? யார்? (1)
* பிறவிச் சப்பாணியை எங்கு கொண்டு வந்து வைத்தனர்? ஏன்? (2)
* 'எங்களை நோக்கிப்பார்' என்று பேதுருவும் யோவானும் பிறவிச் சப்பாணிக்கு கொடுத்து என்ன? (6)

- பிறவிச் சப்பாணியின் கால்களும் கரடுகளும் எப்பொழுது பெலன் கொண்டது? (7)
- பிறவிச் சப்பாணி சுகமானதும் முதலில் எங்கு சென்றான்? (8)

கருத்து :

இயேசுகிறிஸ்துவின் நாமம் வல்லமையுள்ள நாமம். நாம் அவரை ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிடமும் நோக்கிப் பார்த்துக் கொண்டே இருந்தால் பாதுகாக்கப்படுவோம்.

*****

பாடம் 3 : காவலில் வைக்கப்பட்ட பேதுரு, யோவான்

நோக்கம் : இரட்சிப்பின் ஒரே வழி இயேசுகிறிஸ்துவே

ம. வசனம் : அப் 4 : 12

கதை :

ஜான், ராஜ், மோகன் மூவரும் நண்பர்கள். படு சுட்டி பையன்கள். எப்போதும் குறும்பு செய்து கொண்டே இருப்பார்கள். ஒரு நாள் மாந்தோப்புக்கு சென்று மூவரும் மாம்பழம் திருடிய போது தோட்டக்காரன் ஓடி வந்து விரட்ட மூவரும் வேலியை தாண்டி வர படாத பாடு பட்டனர். ஒரு நாள் பள்ளிக்கு பக்கத்தில் உள்ள கடையில் கடலை மிட்டாய் வாங்க மூவரும் சென்றனர். ஜான் ஐந்து ரூபாய் நாணயத்தை கடைக்கார அண்ணாச்சியிடம் கொடுத்து, அண்ணே இரண்டு கடலை மிட்டாய் தாங்க என்று கூற கடைக்காரர் ஐந்து ரூபாய் நாணயத்தை வாங்கி பின்புறம் உள்ள கல்லாப் பெட்டியில் போட்டுவிட்டு மீதி மூன்று ரூபாயை கொடுக்க கல்லாப் பெட்டியை துழாவ ராஜ் மெதுவாக சுவிங்கம் டப்பாவை திறந்து அதிலிருந்து சில சுவிங்கங்களை எடுத்து கால் சட்டை பையில் போட்டான். மோகன் கடைக்காரர் பார்க்காதவாறு பார்த்துக் கொண்டான். கடைகாரரிடம் மீதம் மூன்று ரூபாய் பெற்று கடையிலிருந்து நழுவினர். ஓய்வு நாளில் குளிக்க மூவரும் கிணற்று பம்பு செட்டிற்கு சென்றனர். அவர்கள் குதூகலத்துடன் குளிக்கும் போது கிணற்றின் மீது உள்ள ஓர் கொப்பில் கொய்யாக்காய் தொங்குவதை பார்த்தனர். மூவரின் கண்களும் அதில் பட ராஜ் மெதுவாக கொப்பில் ஏறி கொய்யாக்காயை பறிக்க கொய்யாக்காயை நெருங்கினான். கொப்பு உடைந்து கிணற்றில் விழுந்தான். ராஜ்க்கு நீச்சல் தெரியாது. காப்பாற்றுங்கள் என்று கத்தியபடியே நீரில் தத்தளித்தான். அது மிகவும் ஆழமான கிணறானதால் யாரும் காப்பாற்ற வரவில்லை. இந்த செய்தி ராஜ்ஜின் அப்பாவுக்கு அறிவிக்கப்பட்டது. அவர் ஓடி

வந்து கிணற்றில் குதித்து குற்றுயிராய் கிடந்த ராஜை காப்பாற்றினார். இதே போலதான் நண்பர்களோ உறிவனர்களோ நம்மை பாவத்திலிருந்து மீட்க முடியாது இயேசப்பா மாத்திரமே நம்மை மீட்க முடியும். அவரே ஒரே வழி.

வேத கதை : அப் 4:1-23

இயேசு உயிர்த்தெழுந்த செய்தியை பிரசங்கித்த பேதுருவையும் யோவானையும் பிடித்து சிறையில் அடைத்தார்கள். பின்பு இருவரும் விசாரிக்கப்பட்டனர். 'நீங்கள் எந்த வல்லமையினாலே இப்படிப்பட்ட அற்புதங்களை செய்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'உங்களால் சிலுவையில் அறையப்பட்டவரும், தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலேயே இவன் சொஸ்தமானான் என்றார்கள். சொஸ்தமானவனும் அவர்களோட இருந்தபடியால் பேதுருவையும் யோவானையும் தண்டிக்க அவர்களால் முடியாமல் போயிற்று. உடனே அவர்கள் பேதுருவையும் யோவானையும் 'இயேசுவை குறித்து பிரசங்கிக்கக்கூடாது' என்று கட்டளையிட்டு அனுப்பி விட்டனர்.

திருப்புதல் :

- ❋ பேதுருவும் யோவானும் ஏன் சிறையில் அடைக்கப்பட்டனர்? (2, 3)
- ❋ பேதுருவின் இரண்டாவது பிரசங்கத்தில் இரட்சிக்கப் பட்டவர்கள் எத்தனை பேர்? (4)
- ❋ பேதுருவையும் யோவானையும் எத்தனை நிபந்தனையின் கீழ் விடுதலை செய்தனர்? (18)
- ❋ பேதுருவும் யோவானும் அவர்கள் நிபந்தனைக்கு கீழ்படிந்தனரா? (19)

கருத்து :

இயேசுவாலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. காரணம் அவர் ஒருவர் மாத்திரமே நமக்காக பாடுபட்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிரோடு எழுந்தவர். இன்றும் ஜீவனோடி ருக்கிறார். ஜீவனோடிருக்கிறவர் அவர் ஒருவரே.

❋❋❋❋❋

பாடம் 4 : தேவனை வஞ்சிக்க நினைத்தவர்கள்

நோக்கம் : தேவனிடத்தில் எதையும் நாம் மறைக்க முடியாது.

ம.வசனம் : லேவி 19:11

கதை :

சாம், ஜோசப் இருவரும் நண்பர்கள். சாம் தினமும் ஜோசப் வீட்டிற்கு சென்று விளையாடுவான். ஜோசப் வீட்டு தோட்டத்தில் அழகழகான பூக்கள், பழ மரங்கள், பழங்கள் காய்த்துக் தொங்கும். கொடிகள் எல்லாம் இருந்தன. ஜோசப்பின் அப்பா அன்று புதிதாய் தற்பூசணி கொடி படந்திருப்பதை பார்த்து சந்தோஷப்பட்டார். ஜோசப் மற்றும் சாமை கூப்பிட்டு காண்பித்தார். ஒரு வாரம் கழித்து அதில் அழகான ஒரு தற்பூசணி காய்த்திருந்தது. ஜோசப்பின் அப்பா இன்னும் நான்கு நாட்களில் காய் பழுத்து விடும் என்றார். இது நல்ல ஜாதிக்காய். அதனால் ருசி அதிகமாக இருக்கும் என்றார். இதை சாமும் கேட்டுக் கொண்டிருந்தான். சாமுக்கு இந்த தற்பூசணி பழத்தை எப்படியாவது ஜோசப்பின் வீட்டிலிருந்து எடுத்து ருசி பார்க்க வேண்டும் என்று ஆசை. அன்று சாய்ந்திரம் இருட்டும் வேளையில் மெதுவாக பதுங்கி, பதுங்கி ஜோசப் வீட்டிற்கு சென்று தோட்டத்தின் கதவை திறந்து தற்பூசணி பழத்தை பறித்து தன் வீட்டு கொல்லை புறத்திற்கு கொண்டு வந்து மெதுவாக அதை உடைத்து உண்டான். பழம் ருசியாக இருந்தது. தோலை குழி தோண்டி புதைத்து மண்ணால் மூடினான். மறுநாள் ஜோசப்பும் ஜோசப்பின் அப்பாவும் யார் தற்பூசணியை திருடியது என்று விசாரித்தனர். சாம் ஒன்றுமே தெரியாதது போல் இருந்தான். சாமின் அம்மாவும் அப்பாவும் யார் எடுத்தது என்று தெரியாது என்று ஜோசப்பின் அப்பாவிடம் கூறினர். ஒரு வாரம் கழித்து சாம் வீட்டு கொல்லைப்புறத்தில் ஓர் கொடி படர்ந்து தற்பூசணி பூ பூத்தது. சாமின் அப்பா சாம்-ஐ நைய புடைத்து கேட்க உண்மை வெளிவந்தது. சாம் ஜோசப்பின் அப்பாவிடம் மன்னிப்பு கேட்டான்.

வேதகதை : அப் 4 : 33-35, 5 : 1-14

அந்நாட்களில் வாழ்ந்த சீஷர்கள் தங்களுக்கு உண்டானதை எல்லாம் விற்று அப்போஸ்தலர்களின் பாதத்தில் வைத்து சகலத்தையும் பொதுவாய் அனுபவித்தார்கள். அனனியா சப்பீராள் என்பவர்களும் அவ்விதமாக தங்கள் சொத்தை விற்று ஒரு பகுதியை வைத்துக்கொண்டு மீதியை பேதுருவிடம் கொடுத்தனர். பேதுரு கேட்டதற்கு ஆம். நிலத்தை இவ்வளவுக்குத்தான் விற்றோம் என்றான் அனனியா. உடனே அங்கேதானே அவன் மரித்தான். இதை அறியாத சப்பீராளும் இவ்விதமாகவே சொல்லி மரித்தாள்.

திருப்புதல் :

- ✳ சீஷர்களின் சம உரிமைப் பங்கை விவரி? (34,35)
- ✳ அனனியா சப்பீராள் செய்தது என்ன? (1, 2)

* அனனியா யாரிடம் பொய் சொன்னான்? (4, b)
* பொய் சொன்ன அனனியா சப்பீராளுக்கு தேவன் கொடுத்த தண்டனை என்ன? (5, 10)
* அப்போஸ்தலர்கள் செய்த அற்புத அடையாளங்களினால் உண்டான நன்மை என்ன? (14)

கருத்து :

தேவனிடத்தில் நாம் எதையும் மறைக்க முடியாது. நாம் உலக மனுஷனை ஏமாற்றுவதற்காக செய்யும் முயற்சி நம்மையே அழித்துவிடும். ஜாக்கிரதை.

*****

பாடம் 5 : அப்போஸ்தலர்கள் விடுவிக்கப்படுதல்

நோக்கம் : தேவனுக்கு நாம் கீழ்ப்படிந்து வாழ வேண்டியது அவசியம்

ம. வசனம் : அப் 5 : 29 (b)

கதை :

நாட்டுக் கோழி ஒன்று இருந்தது. அதற்கு புதிதாக பொரித்த ஐந்து கோழி குஞ்சுகள் இருந்தது. அதில் இரண்டு வெள்ளை நிற குஞ்சுகள், இரண்டு பழுப்பு நிற குஞ்சுகள், ஒரு கறுப்பு நிற குஞ்சு இருந்தது. வெள்ளை நிற குஞ்சுகள் எப்போதும் அம்மா சொன்னதை கேட்டு கீழ்படிந்தது. பழுப்பு நிற குஞ்சுகள் சில வேளைகளில் கீழ்படிய மறுத்தன. ஆனால் கறுப்பு நிற கோழிகுஞ்சு அம்மா சொல்வதை எப்போதுமே கேட்பதில்லை. ஒரு முறை நாட்டுக்கோழி தன் குஞ்சுகளிடம் குஞ்சுகளே அம்மா கூடவே வாருங்கள் உங்களுக்கு இரை தேடி தருகிறேன். அடுத்த வீட்டுக்குள் போகக்கூடாது, போனால் ஆபத்து நேரிடும் என்று எச்சரித்தது. 5 குஞ்சுகளுமே சரி என்று தலை அசைத்தது. கறுப்பு நிற குஞ்சு மற்ற கோழி குஞ்சுகளிடம் எத்தனை நாள் தான் அம்மா கூடவே போறது. இன்றைக்கு நைசாக பக்கத்து வீட்டினுள் உள்ள அரிசி பானையை திறந்து உண்டால் எளிதில் வயிறு நிரம்பும். என்னுடன் வாருங்கள் என்றது. வெள்ளை குஞ்சுகள் அம்மாவுடன் தான் போவோம் என்று உறுதியாக கூறிவிட்டது. பழுப்பு நிற குஞ்சுகள் சரி என்று கூறி கறுப்பு நிற கோழிகுஞ்சுடன் பக்கத்து வீட்டினுள் நுழைந்தது. அரிசி பானையின் மீது துள்ளி ஏறியது கறுப்பு குஞ்சு. பானையை மூடியிருந்த மூடி கீழே விழுந்த சத்தம் கேட்ட அந்த வீட்டு பாட்டி கையில் இருந்த கரண்டியை கோழி குஞ்சுகள் மீது வீச அது பழுப்பு நிற கோழி குஞ்சின் காலில் பட்டு கால் முறிந்தது. மூன்று

குஞ்சுகளும் அலறி அடித்து ஓடி வந்து வீடு சேர்ந்தது. நாட்டுக்கோழி அவற்றை அன்புடன் கண்டித்து உடைந்த காலுக்கு மருந்து போட்டது. அம்மாவுடன் மாத்திரம் இருங்கள். பிரிந்து போகாதிருங்கள். ஆபத்து வரும் என்றது தாய்கோழி. சாயங்கால வேளையில் மீண்டும் கறுப்பு கோழி குஞ்சு மற்ற குஞ்சுகளிடம் வாருங்கள். நாம் தனியாக போய் இரை தேடலாம் என்றது. மற்ற குஞ்சுகள் மறுக்க கறுப்பு குஞ்சு தனியாக சென்றது. மேலே வட்ட மிட்ட கழுகு, கறுப்பு குஞ்சை பிடித்து பறந்து சென்று உண்டது.

வேத கதை : அப் 5 : 15 - 42

எல்லா ஊர்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளி களையும், அசுத்த ஆவி பிடித்தவர்களையும் அப்போஸ்தலர் களிடத்தில் கூட்டிக்கொண்டு வந்தனர். அவர்களை சுகமாக்கினர். இதனால் பொறாமை கொண்ட பிரதான ஆசாரியனும், சதுசேயனும் அப்போஸ்தலர்களை பிடித்து சிறையில் அடைத்தார்கள். இரவில் தேவ தூதன் சிறைச்சாலை கதவுகளை திறந்து அவர்களை வெளியே கொண்டு வந்தான். அதிகாலமே அவர்கள் தேவாலயத்தில் பிரசங்கித்தனர். இந்த செய்தியை கேட்ட அனைவரும் அவர்களை குறித்து கலக்கம் அடைந்தார்கள். கடைசியாக அவர்களை கொலை செய்ய யோசனை பண்ணினர். அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் தேவனுக்குக் கீழ்ப்படிவதே அவசியம் என்று கூறினர். ஆனாலும் 'தெயுதாஸ், யூதாஸ் போல இந்த கிரியைகள் மனுஷரால் உண்டானால் ஒழிந்து போகும்' என்று நியாய சாஸ்திரியாகிய கமாலியேல் சொன்னதால் அவர்களை விடுதலை செய்தார்கள்.

திருப்புதல் :

- பிரதான ஆசாரியனுக்கு அப்போஸ்தர்கள் மேல் ஏன் பொறாமை ஏற்பட்டது? (16)
- பொறாமையினால் அப்போஸ்தலர்களை என்ன செய்தார்கள்? (18)
- சிறையில் அடைக்கப்பட்ட அப்போஸ்தலர்களை விடுதலை செய்தது யார்? (19)
- விடுதலை செய்த அப்போஸ்தலர்களுக்கு தேவதூதன் இட்ட கட்டளை என்ன? (20)
- பிரதான ஆசாரியன் ஏன் கலக்கம் அடைந்தான்? (23)
- எது அவசியம் என்று அப்போஸ்தலர்கள் கூறினர்? (29)
- 'அப்போஸ்தலர்களுடைய இந்த கிரியை மனுஷரால் உண்டாயிருந்தால் ஒழிந்து போம்' என்று கூறியது யார்?

கமாலியேல் (34)

* அப்போஸ்தலர்கள் என்றைக்கெல்லாம், எங்கெல்லாம், எப்படி பிரசங்கித்தார்கள்? (42)

கருத்து :

அப்போஸ்தலர்களை சிறையில் இருந்து தேவதூதன் வெளியே கொண்டு வந்ததன் நோக்கம், இயேசுவைப் பற்றி பிரசிங்கிக்கவே. இன்று உங்களையும் அவருக்கு மாத்திரமே கீழ்படிய உருவாக்கியுள்ளார். செய்வீர்களா?

*****

பாடம் 6 : குற்றம் சாட்டப்பட்ட ஸ்தேவான்

நோக்கம் : சபையில் எந்த வேலையைச் செய்வதற்கும் நற்சாட்சி பெற்ற பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டவர்கள் தேவை.

ம. வசனம் : எபி 11 : 1, 2

கதை :

சதீஸ் நன்றாக வேதம் வாசித்து ஜெபிக்கும் பையன். இயேசப்பா கிட்ட ரொம்ப நேரம் ஜெபிப்பான். வீட்டிலும் ஊரிலும் நல்ல பையனாக இருந்தான். சதீஷின் நண்பர்கள் சதீஷை பாவம் செய்ய வைக்க எவ்வளவோ முயற்சி செய்தனர், முடியவில்லை. ஒரு முறை பள்ளியில் சதீஷ் தனது சைக்கிளில் செல்லும்போது குட்டிபையன் பிரின்ஸ் மீது அந்த சைக்கிள் மோதியது. பிரின்சின் தலையில் காயம் ஏற்பட்டது. சதீஷின் நண்பர்கள் சதீஷிடம் டேய் நீ தான் சைக்கிளில் அவனை இடிச்சன்னு எங்கள தவிர யாருக்கும் தெரியாது. ஏன் பிரின்சுக்கே தெரியாது. அதனால ஒண்ணுமே தெரியாத மாதிரி இருந்துக்க. நாங்க பாத்துக்குறோம் என்றார்கள். டேய் நீ மாட்டிக்கிட்டனா பள்ளியின் தலைமை ஆசிரியர் உன்னை அடி பின்னிடுவாரு. அசெம்பிளியில் வைத்து கேவலப்படுத்திவிடுவார் என்றனர். ஆனால் சதீஷ் இயேசப்பாவின் பிள்ளை. அவன் சைக்கிளை ஓரமாக நிறுத்திவிட்டு ஓடிச்சென்று பிரின்ஸ் தம்பியை தன் கையால் தூக்கி தன் கைகுட்டையால் பிரின்சின் தலையில் கட்டினான். ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. சதீஷ் அவனை தன் சைக்கிளில் வைத்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று பிரின்ஸின் தலையில் இருந்த காயத்துக்கு மருந்து கட்டினான். பள்ளி தலைமை ஆசிரியரிடம் சென்று தனது தவறை கூறினான். நடந்ததை கேட்ட தலைமை ஆசிரியர் சதீஷை பாராட்டினார். பள்ளி அசெம்பிளியில் சதீஷை கவுரவப்படுத்தினார். சதீஷை போல எல்லாரும் மாற வேண்டும் என்று தலைமை ஆசிரியர் உரை நிகழ்த்தினார்.

வேத கதை : அப் 6 : 1-15

சீஷர்கள் எல்லா சொத்தையும் பொதுவாக அனுபவித்து வந்தார்கள். அந்நாட்களில் சீஷர்களின் தொகை பெருகியது. அதனால் சில பிரச்சனைகள் வந்தது. அதனால் 12 அப்போஸ்தலர்கள் கூடி பேசி பந்தி விசாரிப்புக்கென்று பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்த நற்சாட்சிப்பெற்ற 7 பேரை தெரிந் தெடுத்தனர். அந்த 7 பேரில் ஸ்தேவான் என்பவனும் ஒருவன். அவன் விசுவாசத்தினாலும் வல்லமை யினாலும் அநேக அற்புதங்களைச் செய்தான். ஆனாலும் சிலர் ஸ்தேவானோடு தர்க்கம் பண்ணினர். அது மட்டுமல்ல. சில பொய் சாட்சிகளை ஏற்படுத்தி, பொய் குற்றம் சாட்சி ஆலோசனை சங்கத்தாருக்கு முன்பாக இழுத்துக்கொண்டு சென்றனர்.

திருப்புதல் :

* சீஷர்கள் பெருகின போது ஏற்பட்ட பிரச்சனை என்ன?(1)
* எது தங்களுக்கு நல்லதல்ல என்று அப்போஸ்தலர்கள் கூறினர்? (2)
* பந்தி விசாரிப்புக்கு யாரை ஏற்படுத்தினர்? (3)
* அப்போஸ்தலர்களின் வேலை என்ன? (4)
* யார் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புத அடையாளங்களை செய்தது? (8)
* ஸ்தேவானுக்கு விரோதமாக கூறிய பொய் சாட்சி என்ன? (14)

கருத்து :

பந்தி விசாரிப்பு என்பது ஒரு சாதாரண பொறுப்பு தான். ஆனாலும் தேவனால் நற்சாட்சிப் பெற்றவர்கள் நியமிக்கப் பட்டார்கள். இன்றும் தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள பொறுப்பு சிறியதாக இருந்தாலும் உங்கள் நற்சாட்சியை காத்துக் கொள்ளுங்கள்.

✱✱✱✱✱

பாடம் 7 : முதல் இரத்த சாட்சி

நோக்கம் : நமக்கு தீங்கு செய்பவர்களையும் மன்னிக்கும் சுபாவம் நமக்கு வேண்டும்.

ம. வசனம் : எபே 4 : 32

கதை :

டாமி என்ற நாயும் டைகர் என்ற நாயும் நண்பர்கள். இரண்டு நாய் குட்டிகளுமே ஒரே எஜமானுடைய வீட்டில் வளர்ந்தன.

டாமியை எஜமானுக்கு ரொம்ப பிடிக்கும். டைகரை யாரும் அந்த அளவுக்கு சட்டை செய்வதில்லை. எஜமானுடைய குழந்தைகள் கூட டாமியிடமே அதிக அன்பு காட்டினர். இது டைகருக்கு பிடிக்கவே இல்லை. டைகர் நாய்க்குட்டி எப்படியாவது டாமி-ஐ எஜமானர் வெறுக்கனும். அதுக்காக ஏதாவது செய்யனும் என்று யோசித்தது. டாமி எப்போதும் எஜமானுடன் காலை வேளையில் வாக்கிங் செல்வது வழக்கம். டைகர் அதிகாலையிலே எழுந்து எஜமானுடைய ஷு-வை கிழித்து குதறி விட்டு சென்று படுத்துவிட்டது. டாமி காலையில் எழுந்து எஜமானுடன் வாக்கிங் செல்ல தயாராகும்போது காலணி பழுதுபட்டிருப்பதை கண்டு எஜமான் டாமி மீது கோபம் கொண்டார். இருந்தாலும் இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று எண்ணினார். அடுத்தநாள் டைகர் மீண்டும் எஜமானுடைய ஷு-வில் தனது வாயை வைத்தபோது டாமியிடம் மாட்டிக்கொண்டது. டைகரின் வாயில் இருந்து டாமி ஷு-வை பறிக்கவும் எஜமான் வரவும் சரியாக இருந்தது. டாமிக்கு பயங்கர உதை கிடைத்தது. டாமி அழுதுகொண்டே இருந்தது. டைகரை காட்டிக் கொடுக்கவில்லை. டைகர் உள்ளம் உடைந்து. ஏன் நீ என்னை காட்டிக் கொடுக்கவில்லை? ஏன் என் மீது விழவேண்டிய அடிகளை நீ பெற்றாய்? என்று கேட்டது. டாமி அதற்கு பதிலாக உன்னை நான் நேசிக்கிறேன். நீ என் நண்பன் என்று கூறியது. டைகர் டாமியின் அன்பை பார்த்து மனம் மாறியது.

வேத கதை : அப் 7 : 1 - 60

ஸ்தேவான் மீது குற்றம் சாட்டப்பட்டது. பிரதான ஆசாரியன் ஸ்தேவானை நோக்கி 'உன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் உண்மைதானா?' என்றான். அதற்கு ஸ்தேவான், ஆபிரகாம் சம்பவத்திலிருந்து சாலமோன் தேவனுக்கு ஆலயம் கட்டிய சம்பவம் வரை பிரசங்கித்தான். அத்தோடு விட்டுவிடாமல் தேவனுடைய வார்த்தைகளை நமக்கு உரைத்து வந்த தீர்க்கதரிசிகளைப் பற்றியும் சொன்னான். மேலும் 'உங்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளை துன்புறுத்தியது போல் நீங்களும் செய்கிறீர்கள்' என்றான். இவைகளை கேட்டதும் அவர்கள் கோபம் கொண்டு ஸ்தேவான் மேல் கல்லெறிந்தார்கள். 'இவர்கள் மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும்' என்று கூறி ஸ்தேவான் தாதிரும் மரித்துப் போனான்.

திருப்புதல் :

* ஆபிரகாமுக்கு தேவன் எதை வாக்குப்பண்ணினார் என்று ஸ்தேவான் கூறினான்? (5)
* மோசே எதில் வல்லவன் ஆனான் என்றான் ஸ்தேவான்? (22)

* ஜனங்கள் ஸ்தேவான் மேல் கோபங்கொள்ள காரணம் என்ன? (53)
* ஸ்தேவான் வானத்தை அண்ணாந்து பார்த்து என்ன சொன்னான்? (55, 56)
* ஸ்தேவானை தீயவர்கள் என்ன செய்தனர்? (57, 58)
* ஸ்தேவான் தீயவர்களை எப்படி மன்னித்தான்? (60)

கருத்து :

ஸ்தேவானைப்போல நாமும் நம்மைப் பகைக்கிறவர்களையும், நமக்கு விரோதமாக தீங்கு செய்பவர்களையும் மன்னிக்க வேண்டும்.

*****

பாடம் 8 : மாயவித்தைக்காரன் சீமோன்

நோக்கம் : தேவனுடைய வரத்தை பணத்தால் பெற முடியாது.

ம. வசனம் : ஏசாயா 44 : 3

கதை :

ஓர் அருமையான காட்டில் தேனீக்களும், ஈக்களும் வாழ்ந்தன. தேனீக்கள் சுறுசுறுப்பாக பறந்து சென்று பூக்கள் மீது உட்கார்ந்து அதில் உள்ள தேனை உறிஞ்சி அருமையான தேன்கூடு கட்டியது. நாளடைவில் இந்த தேன் கூடு பெரிதாகி அதிகமான தேன் உற்பத்தியானது. இதை பார்த்துக் கொண்டிருந்த ஈக்கு தானும் தேனீ போல் மாறனும், அந்த தேன் கூட்டு அடையில் சென்று உட்காரனும் என்று நினைத்தது. அதற்காக தன்னிடம் உள்ள எதையும் கொடுக்க ஈ தயாராக இருந்தது. ஒரு நாள் ஈ தேனீயிடம் அண்ணே, அண்ணே நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க. தேன்கூடு ரொம்ப அழகா இருக்கிறது நானும் அந்த தேன் கூட்டுல வந்து உங்கள போலவே வசிக்கனும். அதுக்காக எதை வேண்டு மானாலும் தருகிறேன் என்றது. தம்பி நீ உன்னிடமுள்ள எதை கொடுத்தும் இந்த தேனடையை வாங்க முடியாது. நீயும் என்னைபோல் மாறமுடியாது என்றது தேனீ. ஆனால் ஈ பிடிவாதமாக இருந்தது. எப்படியாவது அந்த தேனடையில் சென்று வாழவேண்டும். ஏதாவது குறுக்குவழி இருக்கிறதா என்று யோசித்தது. இறுதியில் தனது முடிவுபடி தேனீக்கு தெரியாமல் அது இல்லாத நேரத்தில் பறந்து சென்று தேன் கூட்டு அடையில் உட்கார்ந்த சிறிது நேரத்திலேயே தேன் அதின் மீது ஒட்டியது. ஈயால் தனது காலையோ சிறகையோ எடுக்க முடியவில்லை. பரிதாபமாக தனது உயிரை அந்த தேன் கூட்டில் விட்டது.

வேத கதை : அப் 8 : 1 - 24

ஸ்தேவானை கல்லெறிந்து கொன்ற பிறகு எருசலேமில் உள்ள சபை மக்களுக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று எல்லாரும் யூதேயா சமாரியா தேசங்களில் சிதறப்பட்டு போனார்கள். சவுல் என்றொரு மனிதன் வீடு வீடாக நுழைந்து ஆண்கள் பெண்கள் அனைவரையும் இழுத்துக் கொண்டு போய் காவலில் போட்டான். சிதறிப்போனவர்கள் சுவிசேஷ வசனத்தை பிரசங்கித்தார்கள். அதில் "பிலிப்பு" என்பவனும் ஒருவன். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள் பார்த்து அவன் சொல்லுவதையும் உற்றுக் கேட்டார்கள். அநேகர் சுகமாயினர். அதனால் சமாரியாவில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. அந்த பட்டணத்தில் சீமோன் என்றொரு மாய வித்தைக்காரன் இருந்தான். தன்னுடைய மாய வித்தையினால் எல்லோரையும் பிரமிக்க செய்து வந்தான். ஆனாலும் பிலிப்புவின் பிரசங்கத்தைகேட்டு தொடப்பட்டு ஞானஸ்தானம் பெற்றான். இந்தசமாரியரைப் பார்க்க பேதுருவும் யோவானும் வந்தனர். இவர்கள் கைகளை வைத்ததும் எல்லோரும் பரிசுத்த ஆவியையும் பெற்றார்கள். சீமோன் இதை பார்த்ததும் அவர்களிடத்தில் பணத்தை கொண்டு வந்து 'நான் எவன் மேல் என் கைகளை வைக்கிறேனோ அவன் பரிசுத்த ஆவியை பெறத்தக்கதாக எனக்கு இந்த அதிகாரத்தை கொடுக்க வேண்டும்' என்றான். பேதுரு சீமோனை இதற்காக கடிந்து கொண்டார்.

திருப்புதல் :

- சவுல் சபையை எப்படி பாழாக்கினான்? (3)
- சமாரியா பட்டிணத்திலே உண்டான சந்தோஷத்திற்கு காரணம் என்ன? (6, 7)
- சீமோன் யார்? (9)
- சீமோனைக்குறித்து பெரியோர் சிறியோர் யாவரும் என்ன எண்ணினர்? (10)
- புருஷரும் ஸ்திரிகளும் எதை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர்? (12)
- பரிசுத்த ஆவியை பெற்றுக்கொள்ளும்படி பேதுருவும் யோவானும் செய்தது என்ன? (16,17)
- சீமோன் எதை வாங்கும்படி பேதுருவிடம் பணம் கொண்டு வந்தான்? (18)
- பேதுரு சீமோன் விரும்பியதை பணத்திற்காக கொடுத்தானா? (20)

※ பேதுரு சீமோன் விரும்பியதை கொடுக்காததற்கு காரணம் என்ன? (21)

கருத்து :

சில காரியங்களை பணத்தினால் வாங்க முடியாது. உதாரணத்திற்கு ஞானம், அறிவு, புத்தி போன்றவை எந்தக் கடையிலும் கிடைக்காது. அது போலவே பரிசுத்த ஆவியும் இவைகளை நாம் ஜெபித்து பெற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

*****

பாடம் 9 : எத்தியோப்பியரின் மந்திரி

நோக்கம் : நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி கிறிஸ்து

ம. வசனம் : I பேதுரு 1:19

கதை :

டேய் தம்பி எத்தனை தடவைடா சொல்றது. இப்படி திருடா தேன்னு நீ மாட்டிக்கிடுவடா என்று தம்பி சோனுவை பார்த்து அண்ணன் சீனு கூறினான். சோனு, சீனுவின் தம்பி பயங்கர கோபக்காரன். முரட்டு குணம் உடையவன். சண்டை போடுபவன். திருடுவதில் கை தேர்ந்தவன். சோனு திருடுவது சீனுவுக்கு பிடிக்காது. எப்போதும் சீனு, சோனுவை கண்டிப்பான். ஆனால் சோனு அதை பெரிதாக எடுத்துக் கொள்வதே இல்லை. சோனு ஒரு நாள் தன் பள்ளியில் பயிலும் நண்பனின் கைக்கடிகாரத்தை திருடி வந்து விட்டான். இது சீனுவுக்கு தெரிந்தது. சீனு எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் சோனு கேட்கவில்லை. சோனு தன் நண்பர்களுடன் பண்ணையார் பங்காரப்பா வீட்டில் கொள்ளை அடிக்க திட்டமிட்டனர். இரவு 12 மணிக்கு அங்கு சென்றனர். சோனுவும் நண்பர்களும் பீரோ சாவியை எடுத்து பணத்தை அள்ளும் போது பண்ணையார் விழித்துக் கொண்டார். சோனுவை கட்டிப்பிடித்து சண்டை போட்டார். நண்பர்கள் ஓட, பண்ணையார் வீட்டு வேலைக்காரன் போலீசுக்கு போன் செய்ய. சோனு தன்னிடம் இருந்த கத்தியை எடுத்து பண்ணையாரை குத்தி கொலை செய்து தப்பி வீட்டிற்கு ஓடினான். வீட்டில் இருந்த சீனு சோனுவின் நிலை கண்டு அதிர்ச்சி அடைந்தான். அவசரமாக சீனு சோனுவின் இரத்தம் படிந்த உடைகளை கழற்றி மாட்டிக் கொண்டான். போலீஸ் வந்து சீனுவை கைது செய்து தூக்கிலிட்டது. சோனு கதறி அழுதான். தன் குற்றத்திற்காய் அண்ணன் தூக்கிலிடப்பட்டாரே என்று அதன் பின் அவன் மனம் மாறி வாழ்ந்தான்.

வேத கதை : அப் 8 : 25 - 40

இவ்விதமாக சமாரியாவில் ஊழியத்தை முடித்துவிட்டு எருசலேமிற்கு பிலிப்பு சென்றான். வழியில் கர்த்தருடைய தூதன் பிலிப்புவை எருசலேமிலிருந்து காசா பட்டிணத்திற்கு போகிற வனாந்திர வழியாக போகச் சொன்னார். அங்கு ஒரு இரதத்தில் எத்தோப்பிய ராஜஸ்திரியாகிய கந்தாகே என்பவருக்கு மந்திரியான ஒருவன் சென்று கொண்டிருந்தான். அவன் எருசலேம் வந்து தேவனை பணிந்து கொண்டு திரும்புகிற வழியில் ஏசாயா புத்தகத்தை வாசித்து கொண்டிருந்தான். ஆவியானவரின் வழிநடத்தலின் படி பிலிப்பு அந்த இரதத்திலே அவனோடு ஏறிக்கொண்டான். 'ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படுவதற்கு கொண்டு போகப்பட்டார்' என்ற பகுதியை அர்த்தம் விளங்காமல் வாசித்துக் கொண்டிருந்த அந்த மந்திரிக்கு பிலிப்பு தெளிவு படுத்தினான். அதை கேட்டு மந்திரி ஞானஸ்நானம் பெற்றான்.

திருப்புதல் :

- ※ சமாரியாவில் ஊழியத்தை முடித்த பிலிப்பு எங்கு சென்றான்? (25)
- ※ கர்த்தருடைய தூதன் பிலிப்புவை எங்கு எப்படி செல்லச் சொன்னான்? (26)
- ※ எத்தியோப்பியன் யார்? எவற்றிற்கு தலைவன்? எதற்கு எருசலேம் வந்தான்? (27)
- ※ எத்தியோப்பியன் ஊருக்கு திரும்பும் போது என்ன செய்து கொண்டிருந்தான்? (28)
- ※ பிலிப்பு அந்த எத்தியோப்பியனுடன் ரத்தில் ஏறி அவனுக்கு செய்தது என்ன? (30, 31, 35)
- ※ எத்தியோப்பியன் வாசித்த வேத பகுதி எது? (32,33)
- ※ வேதத்தின் விளக்கத்தை கேட்ட உடன் எத்தியோப்பியன் செய்தது என்ன? (38)

கருத்து :

இயேசுகிறிஸ்து நமக்காக ஒரு ஆட்டைப் போல அடிக்கப்பட்டார். நமக்காக எல்லா பாடுகளையும் சகித்துக் கொண்டார். அவருக்கு நியாயமான தீர்ப்பு வழங்கப்படவில்லை. ஒன்றுமே செய்யாத அவரை சிலுவையில் அறைந்தனர். இதைக் கேட்ட முதல் முறையிலே எத்தியோப்பியன் விசுவாசித்து இயேசுவை ஏற்றுக்கொண்டது போல நீங்கள் ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

✱✱✱✱✱

பாடம் ௧௦ : தர்சு பட்டணத்து சவுல்

நோக்கம் : தமது பிள்ளைகளுக்கு விரோதமாய் எவரும் செயல்படுவதை கர்த்தர் பொறுக்க மாட்டார்.

ம. வசனம் : சக ௨:௮

கதை :

ஒரு காட்டில் சிங்கமும் அதன் இரண்டு குட்டிகளும் சந்தோஷமாக வாழ்ந்து வந்தது. அதே காட்டில் ஒரு நரி இருந்தது. அது தந்திரம் நிறைந்தது. சரியான சோம்பேறி. உணவுக்காக வேட்டையாடாமல் வேறு யாரையாவது ஏமாற்றி உணவை அபகரித்து உண்பதே நரியின் வேலை. ஒரு நாள் சிங்கம் உணவு தேட சென்றது. ஒரு நல்ல மான் குட்டியை அடித்து தன் சிங்க கெபிக்கு கொண்டு வந்தது. தன் இரண்டு குட்டிகளிடம் அதை கொடுத்துவிட்டு மீண்டும் உணவு தேட சென்றது. சிங்கம் இல்லாத வேளை பார்த்து நரி சிங்க கெபிக்கு வந்து சிங்க குட்டிகளை மிரட்டியது. சிங்க குட்டிகள் நடுநடுங்கி உணவை நரியிடம் ஒப்படைத்தன. நரியும் அதனை உண்டுவிட்டு தினமும் வருவேன் எனக்கு உணவை எடுத்து வைக்கனும் இல்லை உங்களை கொன்று விடுவேன் என்று மிரட்டி சென்றது. சிங்கம் வந்து பார்த்தபோது கெபியில் எலும்பு துண்டுகள் மட்டுமே கிடந்தது. சிங்க குட்டிகள் என்ன நடந்தது என்று சிங்கத்திடம் கூற சிங்கம் கர்சித்தது. அடுத்த நாள் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று சிங்கம் கூறியது. மறுநாள் சிங்கம் ஓர் புள்ளிமானை அடித்து கெபியில் சிங்க குட்டிகளிடம் கொடுத்து வெளியில் வந்து ஒளிந்து கொண்டது. நரி தந்திரமாக கெபிக்குள் சென்று சிங்க குட்டிகளை மிரட்ட சிங்கம் வாசலில் வந்து நின்றது. நரியை நைய புடைத்து நொண்டி நொண்டி ஓடும்படி செய்தது. தன் குட்டிகள் ஏமாறுவதை சிங்கத்தால் பொறுத்துக்கொள்ள இயலாது.

வேத கதை : அப் 9:1 - 20

கர்த்தருடைய சீஷரை துன்புறுத்தி வந்த சவுல் அவர்களை கொலை செய்யும்படி பிரதான ஆசாரியரிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு தமஸ்குவிற்கு சென்றான். வழியில் வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றி பிரகாசித்தது. அவன் கீழே விழுந்தான். சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று சொன்ன ஒரு சத்தத்தை கேட்டான். சவுல் நடுங்கி பார்வை இழந்து போனான். அவனை கைலாகு கொடுத்து தமஸ்குவுக்கு கூட்டிக் கொண்டு போனார்கள். அவன் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும், குடியாமலும்

இருந்தான். பின்பு அனனியா என்னும் ஒரு சீஷன் மூலம் பார்வை அடைந்தான். ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவைபற்றி ஆலயங்களில் பிரசங்கித்தான்.

கேள்விகள் :

* சவுல் எதற்காக தமஸ்கு சென்றான்? (2)
* தமஸ்குவுக்கு சமீபித்த போது சவுலுக்கு என்ன நேரிட்டது? (3, 4)
* அனனியா யார்? அவன் கண்ட தரிசனம் என்ன? (10,11,12)
* அனனியாவிடம் சவுலைப்பற்றி கர்த்தர் என்ன சொன்னார்? (15)
* சவுல் எவ்வாறு பார்வையடைந்தான்? (17,18)
* பார்வையடைந்த சவுல் தீவிரமாய் செய்தது என்ன? (20)

கருத்து :

தம்முடைய பிள்ளைகளுக்கு சவுலால் வரும் துன்பத்தை சகிக்க முடியாத கர்த்தர், சவுலை சந்தித்தார். அதனால் சவுலின் வாழ்க்கை தலைகீழாக மாறியது. இன்றும் நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்தால் உங்களையும் இவ்விதமாக காப்பார்.

*****

பாடம் ௮ : மரித்தவள் உயிரோடெழும்புதல்

நோக்கம் : நாம் பிறருக்கு நற்கிரியை செய்கிறவர்களாய் இருக்க வேண்டும்.

ம.வசனம் : ரோமர் 2 : 7

கதை :

குட்டித் தங்கை மேரி பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்தாள். அவள் வீட்டில் மிகுந்த பணக்கஷ்டம். காரணம் அப்பாவால் நடக்க முடியாது. அம்மா கூலி வேலை செய்தார்கள். மேரியுடன் ஜீவாவும் அதே வகுப்பில் படித்தாள். அவளுடைய அப்பா பெரிய பலசரக்குகடை நடத்தி வந்தார். நல்ல வசதி ஜீவாவுக்கு பெருமை அதிகம். அடிக்கடி மேரியை கிண்டல் செய்வாள். மேரி அதிக நாட்கள் மதிய உணவு கொண்டுவர இயலாது. அன்றெல்லாம் ஜீவா அவளை அற்பமாக பேசுவாள். ஒரு நாள் ஜீவா சண்டே ஸ்கூல் போனபோது அங்கு கதை சொன்ன அக்கா ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்கிற அருமையான வசனத்துடன் கதையும் கற்றுக் கொடுத்தார்கள். ஜீவாவின் உள்ளத்தை வசனமும் கதையும் தொட்டது. அன்று முதல் ஜீவா மற்ற பிள்ளைகளுக்கு உதவும் பிள்ளையாக மாறினாள். ஜீவா மேரியிடம் தான் செய்த தவறுக்காக மன்னிப்பு கேட்டாள்.

மேரிக்கு தன்னுடைய அம்மாவிடம் கூறி மற்றுமோர் டிபன் பாக்சில் உணவு கொண்டுவந்து கொடுத்தாள். ஜீவாவை அனைவரும் பாராட்ட ஆரம்பித்தனர். இருவரும் நன்கு பள்ளியில் பயின்றனர். காலம் சென்றது. பள்ளி படிப்பை முடித்தனர். கல்லூரியில் பயின்றனர். ஜீவா டாக்டராக மாறினாள். மேரி கல்லூரி விரிவுரையாளராக மாறினாள். ஜீவாவும், மேரியும் மற்றவர்களுக்கு உதவி செய்கிறவர்களாகவே இருந்தனர்.

வேத கதை : அப் 9 : 36 -43

யோப்பா பட்டணத்தில் தபீத்தாள் என்னும் சீஷி இருந்தாள். அவள் நல்ல காரியங்களையும், தான தருமங்களையும் செய்து வந்தாள். திடீரென்று அவள் வியாதிப்பட்டு மரணமடைந்தாள். யோப்பா பட்டணத்தின் அருகேயுள்ள லித்தா ஊரில் பேதுரு இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரை அழைத்து வந்தனர். பேதுரு வந்ததும் கூடியிருந்த ஸ்திரிகள் தபீத்தாள் தங்களோடு இருக்கையில் செய்திருந்த அங்கிகளையும் வஸ்திரங்களையும் காண்பித்தனர். பேதுரு எல்லாரையும் வெளியே போகச் செய்து முழங்காற்படியிட்டு, ஜெபம் பண்ணி, 'தபீத்தாளே எழுந்திரு' என்றான். உடனே அவள் கண்களை திறந்து உட்கார்ந்தாள். பின்பு பேதுரு போய் சீமோன் என்பவனுடைய வீட்டில் தங்கினான்.

திருப்புதல் :

- தபீத்தாள் அர்த்தம் என்ன? (36)
- தபீத்தாள் யார்? அவள் எப்படிப்பட்டவள்? (37)
- தபீத்தாள் மரித்ததும் சீஷர்கள் என்ன செய்தனர்? (38)
- தபீத்தாள் உயிரோடிருந்த போது செய்தது என்ன? (39 b)
- பேதுரு தபீத்தாளை எவ்வாறு உயிரோடு எழுப்பினார்? (40)
- பேதுரு யோப்பா பட்டணத்தில் யாரிடம் தங்கினான்? அவனின் தொழில் என்ன? (43)

கருத்து :

தபீத்தாள் உயிரோடிருந்த காலங்களில் நற்கிரியைகளையும், தருமங்களையும் செய்தாள். உதவியை அவளிடமிருந்து பெற்றவர்கள் அவள் மரித்த போது பேதுரு மூலமாக அவளை உயிரோடு எழுப்பினர். நீங்களும் இதே போல நற்கிரியைகளைச் செய்யுங்கள். அப்பொழுது நாம் மரிதாலும் தேவன் நம்மை உயிரோடெழுப்பி பரலோகம் கொண்டு செல்வார்.

*****

பாடம் 12 : நூற்றுக்கதிபதி கொர்நேலியு

நோக்கம் : தேவன் பட்சபாதமுள்ளவரல்ல

ம. வசனம் : அப் 10 : 34,35

கதை :

ஒரு பண்ணை வீட்டில் கழுதையும், காளை மாடும் இருந்தன. காளை மாடு காலையிலேயே எழுந்து வயலுக்கு உழுவதற்கு செல்லும் கழுதை காலையில் சலவை செய்பவனுடன் பண்ணையார் வீட்டு அழுக்கு துணிகளை சுமந்து கொண்டு வாய்காலுக்குச் செல்லும். ஆனால் மதியமே வீட்டிற்கு வந்து பண்ணையார் வீட்டில் கொடுக்கப்படும் உணவை உட்கொண்டு படுத்துத் தூங்கும். ஒரு நாள் இரவு காளை மாடு கழுதையுடன் பேச்சு கொடுத்தது தான் பகலில் வெளியில் வயலில் வேலை செய்ததை வருத்தத்துடன் கூறியது. கழுதையோ நான் இன்று ஆற்றுக்கு சென்றேன். சலவை தொழிலாளி சலவை செய்யும் போது நான் புல் மேய்ந்தேன். அதன்பின் வீடு வந்து விட்டேன் என்றது. இதை கேட்ட காளை மாடு எஜமான் பட்சபாதமுள்ளவர் நான் எவ்வளவு உயரமாக அழகாக இருக்கிறேன். எனக்கு கஷ்டமான வேலை. ஆனால் இந்த கழுதைக்கு இலகுவான வேலை என்று நினைத்தது. காளை, கழுதையிடம் நான் இந்த வேலை பழுவிலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும் என்று ஆலோசனை கேட்டது. நீ நாளை முதல் வயலுக்கு வேலைக்காரர்கள் கூப்பிடும் போது படுத்துக் கொண்டு எழும்பாதே என்றது கழுதை. அதே போல காளையும் செய்தது. காளைக்கு உணவு அது இருக்கும் இடம் தேடி வந்தது. ஒரு வாரமாக காளை எழும்பவே இல்லை. இதை வேலைக்காரர்கள் பண்ணையாருக்கு அறிவித்தனர். பண்ணையார் எதற்கும் உதவாத காளை நமக்கு தேவையில்லை. எனவே அதனை கசாப்பு கடையில் நாளை கொண்டு விட்டுவிடு என்று உத்திரவிட்டார். மறு நாள் காளையை லாவகமாக தூக்கி லாரியில் வைத்து கசாப்பு கடைக்கு கொண்டு சென்று காளையின் தலை வேறு உடல் வேறாக வெட்டி வைத்து விற்கப் பட்டது.

தேவன் பட்சபாதமுடையவர் அல்ல. அவனவனுடைய தகுதிக்கு எற்ப அவனவனுக்கு கடினமாக பணிகளை வழங்குவார்.

வேதகதை : அப் : 10 : 1- 48

செசரியா பட்டணத்திலுள்ள இத்தாலியா பட்டாளத்தில் கொர்நேலியு என்னும் நூற்றுக்கு அதிபதி இருந்தான். அவன் தேவ பக்தியுள்ளவன். தேவனுக்கு பயந்தவன். தருமங்களை

செய்கிறவன். ஜெபம் பண்ணுகிறவன். ஒருநாள் அவன் அவ்வாறு ஜெபித்துக் கொண்டிருந்தபோது ஒரு தரிசனம் கண்டான். அதில் தேவதூதன் கொர்நேலியுவிடம், 'நீ யோப்பா பட்டணத்திற்கு ஆள் அனுப்பி பேதுருவை அழைத்து வா' என்றான். அவ்வாறு 3 பேரை கொர்நேலியு அனுபபினான். அங்கு பேதுரு ஜெபம் பண்ணும் போது அவனும் ஒரு தரிசனம் கண்டான். அதில், வானத்திலிருந்து ஒரு கூடு இறங்கியது. உள்ளே சகலவித மிருகங்களும் இருந்தன. மேலும் 'பேதுருவே எழுந்திரு, அடித்து புசி' என்னும் சத்தமும் கேட்டது. பின் பேதுரு கொர்நேலியு வீட்டிற்கு சென்றான். அங்கு கூடியிருந்த அனைவருக்கும் சுவிசேஷம் அறிவித்தான். அவர்கள் அந்நிய ஜாதியானாலும் அவர்களையும் நான் நேசிக்கிறேன் என்பதை இயேசு தரிசனம் மூலம் விளக்கியுள்ளார். பேதுருவின் பேச்சைக் கேட்ட அனைவரும் பரிசுத்த ஆவியை பெற்று ஞானஸ்நானம் பெற்றார்கள்.

திருப்புதல் :

- கொர்நேலியு யார்? (1)
- கொர்நேலியு எப்படிபட்டவன்? (2)
- கொர்நேலியு கண்ட தரிசனம் என்ன?(4,5,6)
- பேதுரு கண்ட தரிசனம் என்ன? (11,12,13,14,15)
- பேதுருவின் பிரசங்கம் என்ன? (38, 43)
- பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டு ஜனங்களுக்கு நிகழ்ந்தது என்ன? (44)

கருத்து :

தேவன் பட்சபாதம் பாராட்ட மாட்டார். அவருக்கு பயந்து, நீதியை செய்கிறவன் மேல் அவர் பிரியமாயிருப்பார். இப்படி செய்யாவிட்டால் உங்கள் மேல் பிரியமாயிருக்கமாட்டார்.

*****

பாடம் 13 : சிறையிலிருந்து தப்புவிக்கப்பட்ட பேதுரு

நோக்கம் : ஊக்கமான ஜெபம் காரியங்களை மாற்றும்

ம.வசனம் : யாக்கோபு 5 :16 (b)

கதை :

டீனுவும், லீனாவும் அண்ணன் தங்கை. இருவருமே சண்டே ஸ்கூலுக்கு ஒழுங்காகச் செல்வார்கள். அப்பா தினமும் குடித்துவிட்டு வந்து சண்டை போடுவதை கண்டு மனம் நொந்து கொள்வார்கள். யாரிடமும் இவர்கள் சந்தோஷமாக பேசமாட்டார்கள். பயந்த

சுபாவத்துடனேயே இருந்தனர். வீட்டிற்கு சென்று பாடத்தை படிக்கலாம் என்றால் அப்பாவுடைய சண்டை. எனவே சரியாக பரிட்சையிலும் மார்க் வாங்க இயலவில்லை. அதே ஊரில் குமார் அண்ணன் இருந்தார்கள். அவர்கள் இயேசப்பாவுக்கு ஊழியம் செய்பவர்கள். ஒரு நாள் டீனும், லீனாவும் சோகத்துடன் நிற்பதை கண்ட குமார் அண்ணன் அவர்களிடம் காரணம் கேட்க அண்ணன் அடுத்த மாதம் எங்களுக்கு முழு ஆண்டுத் தேர்வு கட்டணமாக எனக்கு 50 ரூபாயும் லீனாவுக்கு 50 ரூபாயும் கட்டணும் என்று கூறினான் டீனு. லீனா கண்களை கசக்கியவாறு அண்ணே எங்க அப்பா குடிச்சிட்டு வந்து சண்டை போடுகிறார். இதுக்கு ஒரு முடிவு கிடையாதா வீட்டுல படிக்கவே முடியல என்றாள். குமார் அண்ணன் அவர்களிடம் ஜெபமே ஜெபம். விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும் என்று சொன்னாங்க. அன்று இரவு டீனுவும், லீனாவும் ஊக்கமாக அப்பாவுக்காக ஜெபித்தனர். அடுத்த நாள் அப்பா அப்படியே மாறிட்டார். குடிக்கல. தம்பி, தங்கைக்கு இனிப்பு வாங்கி வந்திருந்தார். பரிட்சை கட்டணத்தையும் அப்பா கொடுத்தார். தம்பியும் தங்கையும் அன்று முதல் தொடர்ந்து ஜெபித்தனர்.

வேத கதை : அப் 12 : 1 - 16

ஏரோதுராஜா சபையை துன்பப்படுத்தி யாக்கோபை கொலை செய்தான். இது யூதருக்கு பிரியமாயிருக்கவே பேதுருவையும் பிடித்து சிறையில் அடைத்தான். சபையார் பேதுருவுக்காக ஊக்கமாக ஜெபம் பண்ணினார்கள். ஓர் இரவு பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான். கர்த்தருடைய தூதன் பேதுருவை எழுப்பி, 'உன் வஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு என் பின்னே வா' என்றான். எல்லாக் கதவுகளும் அவர்களுக்கு தானாக திறவுண்டது. இவ்விதமாக பேதுரு ஏரோதின் கைகளுக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் தப்பினான்.

திருப்புதல் :

- ஏரோது ராஜா பேதுருவை கைது பண்ண காரணம் என்ன? (2,3)
- பேதுரு சிறையில் எப்படி காக்கப்பட்டான்? (4, b)
- சிறையிலிருந்த பேதுருவுக்காக யார், எங்கு கூடி ஜெபித்தனர்? (5,12)
- கர்த்தருடைய தூதன் பேதுருவை எவ்வாறு சிறையிலிருந்து வெளியே கொண்டு வந்தான்? (7,8,10)

கருத்து :

பேதுருவை சிறையில் அடைத்தது ஏரோதுக்கும், யூத ஜனாங்களுக்கும் பிரியமாயிருந்தது. ஆனால் இயேசுவுக்கும், சபை மக்களுக்கும் அது பிரியமாயிருக்கவில்லை. அதனால் சபை மக்களின் ஜெபத்தைக் கேட்டு தேவன் பேதுருவை விடுவித்தார். இதே போல நீங்களும் மற்றவர்களுக்காக ஜெபியுங்கள்.

*****

பாடம் 14 : கள்ளத்தீர்க்கதரிசி பர்யேசு

நோக்கம் : பிறர் கிறிஸ்துவண்டை வருவதற்கு நாம் தடைக்கல்லாய் இருக்கக்கூடாது.

ம.வசனம் : I சாமு 14 : 6(b)

கதை :

டேய் தென்னந்தோப்புல இளநீர் அதிகமாக காய்ச்சிருக்கு. வாடா பறித்து சாப்பிடலாம் என்று கூப்பிட்டான் ரவி தேவாவை. தேவா ரவியிடம் டேய் அடுத்தவங்க தோப்புல இருக்க தேங்காயை திருடறது தப்பு என்று கூறினான். ஆனால் ரவி கேட்கவில்லை. தென்னந்தோப்புக்கு சென்று திருடி சாப்பிட்டான். ரவியை எப்போதும் தேவா அன்புடன் நடத்துவான். ரவியிடம் கண்டிப்புடன் தவறு செய்யக் கூடாது என்று தேவா கூறினான். இதை ரவி சட்டை செய்வதே இல்லை. தேவா ரவியிடம் டேய் இப்படி நீ திருடிக்கிட்டே இருந்தா ஒரு நாள் நீ பெரிய இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கிடுவடா. அதனால் நீ திருடாதே. உன் பாவம் உன்னை தொடர்ந்து பிடிக்கும் என்று தேவா கூறினான். ரவி போடா என் சாமர்த்தியத்தால் நான் தப்பிச்சிடுவேன் என்பான். இது தினம் தினம் ரவிக்கும் தேவாவுக்கும் நடக்கும் அன்பு யுத்தமாக இருந்தது. நாட்கள் சென்றது. ஓர் நாள் ரவி ஓர் தோட்டத்தில் உள்ள மாம்பழங்களை பறிக்க காவலாளி ரவியை பிடித்து போலீசில் ஒப்புக் கொடுத்தான். போலீசார் ரவியை நைய புடைத்தனர். இதை கேள்விப்பட்ட தேவா போலீசில் சென்று ரவிக்காக பரிந்து பேசி வீட்டிற்கு அழைத்து வந்து ரவியின் காயங்களில் மருந்து வைத்து ரவியிடம் மீண்டும் இயேசுவின் அன்பையும் பாவத்தின் கொடூரத்தையும் விளக்கினான் ரவி இயேசப்பாவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டான்.

வேத கதை : அப் 13 : 1-12

பர்னபாவும் பவுலும் சாலமி பட்டணத்திலுள்ள ஜெப ஆலயங்களில் வேத வசனத்தை பிரசங்கித்துவிட்டு பாப்போ

பட்டணம் வந்தார்கள். அங்கே செர்கீயுபவுல் என்னும் அதிபதியுடன் மாயவித்தக் காரனாகிய பர்யேசுவும் இருந்தான். செர்கீயு பவுல் தேவ வசனத்தைக் கேட்க ஆவலாய் இருந்தான். ஆனால் பர்யேசு என்பவன் தன் அதிபதியின் விசுவாசத்தை திருப்பும்படி பர்னபாவோடும் பவுலோடும் எதிர்த்து நின்றான். உடனே பவுல் 'பிசாசின் மகனே இப்பொழுதே கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது. நீ குருடனாவாய்' என்றான். இதைப் பார்த்த அதிபதி விசுவாசித்து இயேசுவை ஏற்றுக் கொண்டான்.

திருப்புதல் :

- செர்கீயு பவுல் யார்? அவருடைய ஆசை என்ன? (7)
- கள்ள தீர்க்கதரிசி யார்? அவன் எந்தப் பட்டணத்தான்? (6)
- மாயவித்தைக்காரன் அர்த்தம் என்ன? (8)
- பவுலுக்கும் பர்னபாவுக்கும் பர்யேசு எதிர்த்து நின்ற காரணம் என்ன? (8)
- பர்யேசுவுக்கு கிடைத்த தண்டனை என்ன? (11)
- அதிபதி எதைக் கண்டு விசுவாசித்தான்? (12)

கருத்து :

மற்றவர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதற்கு தடையாக இராமல் உதவியாக இருங்கள்.

*****

பாடம் 15 : யூப்பித்தர், மெர்க்குரி

நோக்கம் : நமது விசுவாசமே நம்மில் அற்புதங்களை ஏற்படுத்தும்.

ம. வசனம் : யோவான் 11 : 40

கதை :

ஓர் அருமையான தேவ மனிதரின் இல்லத்தில் 2 நாட்களாக உணவு இல்லை. அவர்கள் தங்கள் வயிற்றை தண்ணீரால் நிறைத்தனர். அந்த தேவ மனிதரின் அன்பு மனைவி என்னங்க நாம் 2 நாட்களாக ஜெபிக்கிறோம். ஆனால் நமக்கு உணவு கிடைக்கவில்லையே என்று கூறினார். ஊழியர் சொன்னார் நாம் ஜெபித்தோம். ஆனால் என்ன உணவு எவ்வளவு வேண்டும் என்று கேட்கவில்லையே. இப்போது நாம் கேட்டு ஜெபிப்போம் என்றார். இருவரும் முழங்கால் படியிட்டனர். மனைவி ஜெபிக்கலானார். ஆண்டவரே 4 உருளைக்கிழங்கு, 3 தக்காளி, 6 ரொட்டித் துண்டுகள் நான்காக வெட்டப்பட்டது மற்றும் குளிரூட்டப்பட்ட 2 பாலாடைகள் வேண்டும் என்று ஜெபித்தார். ஊழியக்காரர்

ஆண்டவரே இதை நீர் எங்களுக்கு இன்று தரப்போவதற்காக நன்றி என்று ஜெபித்தார். அரை மணிநேரம் கழித்து கதவை தட்டும் சத்தம் கேட்டு ஊழியக்காரர் சென்று கதவை திறந்தார். அங்கு கையில் கூடையுடன் ஒரு நபர் ஐயா தாங்கள் ஆர்டர் செய்ததை கொண்டு வந்துள்ளேன் என்றார். ஊழியரோ நாங்கள் ஆர்டர் செய்ய வில்லையே. தவறுதலாக நீங்கள் இங்கு வந்திருப்பீர்கள் என்றார். ஆனால் அந்த நபரோ தங்கள் வீட்டு கதவு எண் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பாருங்கள் என்றார். ஊழியக்காரர் அதை வாங்கி சரிபார்த்தார். அவருடைய மனைவி ஜெபிக்கும் போது கேட்டது அனைத்தும் சரியாக இருந்தது. கதவை நோக்கி வேகமாக அந்த நபருக்கு நன்றி சொல்ல வந்தார். ஆனால் அந்த நபரை காணவில்லை.

வேத கதை : அப் 14 : 1- 20

பவுலும் பர்னபாவும் இக்கோனியாப் பட்டணத்தில் பிரசங்கித்து வந்தார்கள். அநேகர் விசுவாசிகளானர். விசுவாசியாதோர் யூதரைப் பின்பற்றி யூதரை கல்லெறியப் பார்த்தனர். அதை அறிந்த யூதர்கள் லீஸ்திராப் பட்டணம் சென்றனர். அங்கே ஒரு பிறவிச் சப்பாணியை சுகமாக்கினர். இதனைக் கண்ட அவ்வூர் ஜனங்கள் பர்னாபாவை யூப்பித்தர் என்றும் பவுலை மெர்க்குரி என்றும் அழைத்தனர். மேலும் அங்குள்ள பூசாரி அவர்களுக்காக எருதைப் பலியிட மனதாயிருந்தான். இருவரும் அதை தடுத்து நிறுத்தினர். ஆனாலும் அந்த பிறவிச் சப்பாணியிடம் காணப்பட்ட விசுவாசம் மற்ற மக்களிடம் காணப்படவில்லை. சில யூதர்களின் சொல் கேட்டு பவுலை கல்லெறிந்தனர்.

திருப்புதல் :

❋ இக்கோனியாப் பட்டணத்தை விட்டு பவுலும் பர்னபாவும் ஏன் சென்றனர்? (5,6)

❋ லீஸ்திராவில் பவுல் செய்த அற்புதம் என்ன? (8, 10)

❋ பிறவிச் சப்பாணிக்கு அற்புதம் கிடைத்தது ஏன்? (9)

❋ லீஸ்திராப் பட்டணத்தார் இவர்களை யார் என நினைத்தனர்? (11)

❋ பர்னபாவுக்கும், பவுலுக்கும் அவர்கள் இட்ட பெயர் என்ன? (12)

கருத்து :

பிறவிச் சப்பாணியைப் போல நீங்களும் இயேசுவை விசுவாசித்தால் உங்கள் வாழ்விலும் அற்புதம் நடக்கும்.

❋❋❋❋❋

பாடம் 16 : சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்படுதல்

நோக்கம் : எல்லா சூழலிலும் நாம் கர்த்தரை துதிக்க வேண்டும்.

ம. வசனம் : சங் 147 : 1

கதை :

ஜாஷ்வா எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படுவான். அவனது வகுப்பு நண்பன் விஸ்வாவுக்கு, ஜாஷ்வாவைப் பார்த்து ஆச்சரியத்துடன் பொறாமையும் வருவதுண்டு. ஏனென்றால், ஜாஷ்வா பணக்காரனாக மாடி வீட்டில் குடியிருப்பதாலும், படிப்பில் முதலிடம் பெறுவதாலும் சந்தோஷமாக இருக்கிறான் என்று நினைத்தான். ஆனால் ஜாஷ்வா எப்போதும், எல்லாரிடமும் அன்பாகவே பழகி வந்தான். திடீரென்று ஜாஷ்வாவின் தகப்பனார் இறந்துபோனார். ஒரு வாரம் ஜாஷ்வா பள்ளிக்கு வரவில்லை.

பிறகு ஜாஷ்வா பள்ளிக்கு வந்தான். ஆனால் காரில் வரவில்லை! எல்லாரும் அவன் கண்ணீருடன் வருவான் என்று எதிர்பார்த்தனர்! ஜாஷ்வாவோ, சற்று இளைத்து சோர்ந்திருந்தானே தவிர அவனது நடவடிக்கைகளில் எவ்வித மாற்றமுமில்லை! இன்முகத்துடனேயே இருந்தான், கவனமாய் பாடங்களைப் படித்தான்.

பள்ளி நேரம் முடிந்தது! ஜாஷ்வாவும் பையைத் தூக்கி தோளில் போட்டுக் கொண்டு கிளம்பினான். நடந்தே வந்தான்! விஸ்வா அவனை நெருங்கி, ஜாஷ்வா! "ஏன் நடந்து போகிறாய்? கார் வரவில்லையா?" என்றான். ஜாஷ்வா புன்முறுவலுடன், "இனி வராது, காரை விற்று விட்டோம்" என்றான். இன்னும் கொஞ்ச தூரம் நடந்தபின் அவனும், விஸ்வாவும் பிரிந்து செல்லும் சாலை வந்தது. ஆனால், அவன் விஸ்வாவின் கூடவே சென்றான். விஸ்வா, "டேய் ஜாஷ்வா! உங்க வீட்டுக்கு அந்த வழியாகப் போக வேண்டும் என்பதை மறந்து விட்டாயா?" என்றான்.

ஜாஷ்வா, "இல்லை விஸ்வா! அந்த மாடி வீட்டை விற்று விட்டோம்! நேற்று முதல் உன் வீட்டுக்கு அடுத்த தெருவில் இருக்கும் வீட்டுக்குக் குடி வந்து விட்டோம்" என்றான்! "ஏண்டா?" என்றான் விஸ்வா சோகமாக! ஜாஷ்வா, "எங்க அப்பா திடீர் என்று மரித்ததால் எதுவுமே ஒழுங்குபடுத்தி வைக்கவில்லை! இதை பயன்படுத்தி கொண்டு எங்கள் உறவினர்கள் எங்கள் சொத்துக்கலைப் பிடுங்கிக் கொண்டனர். அதனால், நாங்கள் ஏழைகளாகி ஏதுமற்றவர்களாகி விட்டோம்! இனிமேல் இங்குதான்! என்றான்.

விஸ்வா ஆச்சரியமாக, "இவ்வளவு நடந்தும் நீ எப்படிடா எப்போதும் போலவே இருக்கிறாய்?" என்று கேட்டான். ஜாஷ்வா,

"நாம் இயேசப்பாவின் பிள்ளைகளல்லவா?" எந்தவித சூழ்நிலையிலும் நாம் அவரைத் துதித்தே வாழ வேண்டும்! "நம் வாழ்வில் இயேசப்பா இருந்தால் போதும்! கஷ்டம், நஷ்டம் எதுவும் நம்மைப் பாதிக்காது! அவர் அனுமதிக்காத எதுவும் நம் வாழ்வில் நிகழாது!" என்றான் விசுவாசம் என்கிற விஸ்வா அசந்து நின்றான்.

வேத கதை : அப் 16 : 13 - 40

பவுலும், சீலாவும் ஆற்றின் அருகே ஸ்தீரிகளுக்கு உபதேசித்தார்கள். தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிற வளுமாகிய லீதியாள் என்பவள் கேட்டு இரட்சிக்கப்பட்டாள். மற்றொரு குறி சொல்லுகிற பெண் அவர்களை பின் தொடர்ந்து 'இந்த மனுஷர் உன்னதமான தேவருடைய ஊழியக்காரர்' என்று சத்தமிட்டாள். 'நீ இவளை விட்டு புறப்பட்டுபோ' என்று பவுல் சொன்னவுடன் குறி சொல்லும் ஆவி அவளை விட்டுச் சென்றது. கோபம் அடைந்த அவர்களுடைய எஜமான் அவளை அதிகாரியிடம் இழுத்துச் சென்றான். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். நடுராத்திரியில் இருவரும் தேவனை துதித்துப் பாடினர். அவருடைய கட்டுக்கள் கழன்று போயின. ஆனாலும் அவர்கள் தப்பி ஓடாததை கண்ட சிறைச்சாலைக்காரன் இரட்சிக்கப்பட்டான்.

திருப்புதல் :

- ❊ லீதியாள் யார்? (14)
- ❊ குறிச்சொல்லும் பெண் பவுலையும் சீலாவையும் பார்த்து சத்தமிட்டது என்ன? (17)
- ❊ பவுல் குறிச்சொல்லும் ஆவியை உடைய பெண்ணை எப்படி விடுவித்தான்? (18)
- ❊ பவுலுக்கும் சீலாவுக்கும் கிடைத்த தண்டனை என்ன? (23, 24)
- ❊ சிறைச்சாயையில் அவர்கள் செய்தது என்ன? (25)
- ❊ அவர்கள் எப்படி விடுதலை ஆனார்கள்? (26)
- ❊ சிறைச்சாலைக்காரன் எப்படி இரட்சிக்கப்பட்டான்? (27 - 33)

கருத்து :

இக்கட்டு நேரங்களிலும் தேவனை துதியுங்கள். அது நல்லது. அது உங்களுக்கு சந்தோஷமும் இன்பமும் தரும்.

❊❊❊❊❊

பாடம் 17 : பெரோயா பட்டணத்தார்

நோக்கம் : அனுதினமும் நாம் வேதத்தை ஆராய்ந்திடவேண்டும்

ம. வசனம் : சங் 119 : 97

கதை :

பள்ளிப்படிப்பில் முதலிடத்தில் தேர்ச்சி பெற்ற ஜீவா, டவுனிலிருந்த கல்லூரியில் சேர்க்கப்பட்டான்! ஹாஸ்டலில் அவனை விட்டுவிட்டு புறப்படும் முன் அப்பா அவனிடம் ஒரு புதிய பைபிளைக் கொடுத்து, "உனக்கு ஏதாவது கஷ்டம் வந்தால் மட்டுமாவது வேதம் வாசி!" என்றார்கள். ஜீவா வேதம் வாசித்து, ஜெபிப்பதை விரும்பி செய்ய மாட்டான். எனவேதான் இப்படி அப்பா கூறினார்கள். வெறுப்புடன் அதனை வாங்கி ஜீவா, தன் அறையில் இருந்த அலமாரியின் மேல் தட்டில் வைத்து, "பாடங்களை படிக்கவே நேரமில்லை. இதை எங்கிருந்து படிக்க?" என்று மனதிற்குள் கூறிக்கொண்டே, உதட்டளவில் சரிப்பா! என்றான்.

அப்பாவும் ஊர் திரும்பினார். ஓரிரு மாதங்கள் பணம் அனுப்பினார். இந்த மாதம் பணம் வரதாமதமானது. ஜீவா கஷ்டமாக இருக்கிறதென்றும் சீக்கிரம் பணம் அனுப்பும் படியும் அப்பாவுக்கு போன் செய்தான். அப்பாவோ, "பைபிள் வாசித்தாயா?" என்றார். ஜீவாவுக்கு எரிச்சல்! ஆனால் அதை மறைத்துக்கொண்டு, "ம்! வாசித்தேன்!" என்று பொய் சொன்னான். அப்பா போனை வைத்துவிட்டார்! ஒரு வாரம் கழித்து மீண்டும் போன் செய்தான். அப்பா அதே கேள்வியை கேட்டார், இவனும் பொய் சொன்னான். அப்பா போனை வைத்துவிட்டார்!

அப்புறமும் பணம் வரவில்லை எனவும், கோபமாக ஜீவா போன் செய்தான். அப்பா நிதானமாக, "வேதம் வாசித்தேன்" என்று நீ பொய் சொல்லுமளவும் என்னிடமிருந்து உனக்கு பணம் வராது" என்றார். போனை வைத்த ஜீவா, கோபமாக வேத புத்தகத்தை எடுத்து தூசி தட்டினான்! முதல் பக்கம் புரட்டினான். நூறு ரூபாய் நோட்டு இருந்தது! வேகவேகமாக மற்ற பக்கங்களை புரட்டினான். இடை இடையே 5, 10, 50 என்று பண நோட்டுக்கள் இருந்தன! எண்ணிப் பார்த்தால் 400 ரூபாய் இருந்தது. கடைசி பக்கத்தில் அப்பா, "மகனே ஜீவா! பணத்திற்காவது வேதத்தை புரட்டினாயே? ரொம்ப சந்தோஷம்! இந்த பணத்தினால் உனக்கு சந்தோசம் வருகிறது என்றால், உன்னை வழிநடத்தும் வேத வசனத்தை வாசித்துபார்! மெய் சந்தோஷம் அவற்றால் உன் வாழ்வில் வரும்! நானும் என் வாழ்வின் சகல வசதிகளையும், வேத வாசிப்பு, ஜெபத்தினால்தான் அடைந்தேன்" என்று கடிதம் எழுதியிருந்தார். கண்ணீருடன் அதை வாசித்த ஜீவா ஜெபம் செய்ய முழங்காற் படியிட்டான்!

வேத கதை : அப் 17 : 1 - 15

பவுலும் சீலாவும் தெசலோனிக்கே பட்டணத்தில் ஊழியம் செய்தனர். அங்குள்ள ஜெப ஆலயங்களில் மூன்று ஓய்வு நாட்கள் வேத வசனத்தை விளக்கிக் கூறினர். அநேகர் விசுவாசிகளானர். விசுவாசியாதவர்கள் சண்டை உண்டாக்கினர். உடனே இவர்கள் பெரோயா பட்டணத்துக்கு சென்றனர். அந்த பட்டணத்தார் மனோ வாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர். அதனால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களை பார்க்கிலும் நற்குணசாலிகளாக இருந்தார்கள்.

திருப்புதல் :

- தெசலோனிக்கே பட்டணத்தில் பவுல் தன் வழக்கப்படி செய்தது என்ன? (2)
- விசுவாசியாதவர்கள் என்ன செய்தார்கள்? (5)
- பவுல், சீலா மேல் அவர்கள் கூறிய புகார் என்ன? (7)
- பெரோயா பட்டணத்தார் எப்படிப்பட்டவர்கள்? (11)

கருத்து :

வேதவசனத்தை அனுதினமும் ஆராய்ந்து பார்த்து பெரோயா பட்டணத்தாரைப் போல நற்குணசாலிகளாய் வாழ பிரயாசப் படுங்கள்.

*****

பாடம் 18 : விக்கிரகங்கள் நிறைந்த பட்டணம்

நோக்கம் : எல்லாரும் மனம் திரும்ப வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம்

ம. வசனம் : II பேதுரு 3 : 9 (b)

கதை :

எடிசன் ஓய்வு நாள் பாடசாலைக்கு சென்ற போது, பொன்னம் பலத்தையும் அழைத்துச் சென்றான். அங்கு மோசேக்கு தேவன் அளித்த கற்பலகைகள் பற்றிய சரித்திரத்தை கதையாக கூறினார்கள். அதை கேட்ட பொன்னம்பலம், "இது கிறிஸ்தவர்களாகிய உங்களுக்குத்தானே? எங்களுக்கல்ல" என்றான். எடிசன், "இல்லைடா! நம் எல்லோரையுமே தேவன்தானே உண்டாக்கினார்? அவரது பிள்ளைகளாக உலகில் எல்லோரும் வாழ அவர் சொல்லிக் கொடுக்கிறார்! இதை ஏற்றுக்கொண்ட எங்களை நீங்கள் கிறிஸ்தவர்கள் என்கிறீர்கள்! ஆனால், நீங்களும் மனம் திரும்பி அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே இறைவனின் ஆசை! என்றான். பொன்னம்பலம் சிந்திக்க ஆரம்பித்தான்!

வேத கதை : அப் 17 : 16 - 34

அத்தேனே பட்டணம் விக்கிரகங்கள் நிறைந்த பட்டணம். அங்குள்ள யூதரோடும் பக்தி உள்ளவர்களோடும் பவுல் சம்பாஷனை பண்ணினான். அவர்கள் பவுலை மார்ஸ் மேடைக்கு அழைத்துக் கொண்டு போய் "நீ சொல்லுகிற புதிய உபதேசத்தைச் சொல்லு" என்றார்கள். உடனே பவுல் பேசத் தொடங்கினான். "அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தை கண்டேன். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்". பவுல் பிரசங்கத்தை கேட்ட சிலர் அவனைப் பற்றிக் கொண்டு விசுவாசிகளானார்கள். அவர்களில் மார்ஸ் மேடையின் நியாயதிபதிகளில் ஒருவனாகிய தியோனீசியு என்பவனும் தாமரி என்னும் பெயருள்ள ஒரு ஸ்திரியும் இவர்களுடனே வேறு சிலரும் ஏற்றுக்கொண்டார்கள்.

திருப்புதல் :

- அத்தேனே பட்டணம் எப்படிப்பட்டது? (16)
- வாயாடி யார்? (18)
- பவுல் எங்கு அழைத்துச் செல்லப்பட்டான்? (19)
- பவுல் அத்தேனே பட்டணத்தாரை குறித்து அறிந்து கொண்டது என்ன? (23)
- பவுல் செய்தியை கேட்டு மனம் மாறியவர்கள் யார்? (34)

கருத்து :

எல்லாரும் மனம் திரும்ப வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம். அதனால் உங்கள் வகுப்பில் உள்ள ஒவ்வொருவருக்கும் இயேசுவைப் பற்றி அறிவியுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள்.

*****

பாடம் 19 : பவுலுடன் ஆக்கில்லா பிரிஸ்கில்லாள்

நோக்கம் : உபத்திரவங்கள் மத்தியிலும் தேவன் நம்மை தைரியப்படுத்துகிறார்.

ம.வசனம் : அப் 18 : 19 b, 10 a

கதை :

காலையில் தூங்கி எழும்போதே ராஜீவுக்கு தலை வலித்தது. பள்ளிக்கு சென்ற சற்று நேரத்திலேயே ஜுரம் வந்து விட்டது. H.M. ராஜீவுடன் பியூனை அனுப்பி வீட்டில் விட்டுவர செய்தார். வீட்டில் பெற்றோர் வேலைக்கு சென்றிருந்தனர். ஜுரத்துடன் கட்டிலில் படுத்தவனை கதவு தட்டும் சத்தம் எழுப்பியது. திறந்து பார்த்தால்,

ஊரில் இருந்து உறவினர் பட்டாளம் வந்திருந்தது. சுகம் இல்லாத பிள்ளை என்றும் பாராமல் அவனை வேலை செய்ய வைத்து உபத்திரப்படுத்தினர். மாலையில் பெற்றோர் வீடு திரும்பினர். ஏற்கனவே மாதக்கடைசி! இப்போது விருந்தாளிகள்! பணம் இன்றி பெற்றோர் தவித்தனர்! அதனால் ராஜீவை வைத்தியரிடம் அழைத்து போக வழியின்றி வீட்டிலேயே சும்மா வைத்திருந்தனர். இரு நாட்களுக்குபின் விருந்தினர் சென்ற பின் வீட்டில் எவ்வித வசதியும் இல்லை. ராஜீவின் உடல்நிலை மோசமானது! ராஜீவின் படுக்கை அருகே வந்து முழங்கால் படியிட்டு ஜெபித்தனர். அப்போது ராஜீவின் H.M. அவன் எப்படி இருக்கிறான் என்று பார்க்க வந்தவர் வீட்டின் நிலை கண்டு திகைத்துப் போனார்! இவ்வளவு வறுமையா? உடனடியாக தனது மகனுடைய மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்! வைத்தியம் பார்த்து, சுகமான பின் ராஜீவுக்கு மறுநாள் பரிட்சை என்பது நினைவில் வந்து கலங்கினான். ஒரு வாரமாக பாடு பட்டதில் படிக்க முடியவில்லையே என்று ஜெபித்தான். அன்று இரவிலிருந்து ஒரு வாரம் கடும் மழையை கர்த்தர் கட்டளையிட்டார். ஒரு வாரம் பள்ளிக்கூடம் லீவு. அந்த நாட்களில் ராஜீ நன்கு படித்துக் கொண்டான்.

நல்ல சுகமாகி பள்ளி சென்றபோது அருமையாய் பரிட்சை எழுதினான். தொல்லைகளின் மத்தியிலும் கர்த்தர் தன்னை காத்த விதத்தை எண்ணி அவர்கள் குடும்பமாக நன்றி செலுத்தினர்.

வேத கதை : அப் 18 : 1- 19

அத்தேனே பட்டணம் விட்டு கொரிந்து பட்டணம் வந்த பவுல் ஆக்கில்லாவையும், பிரிக்கில்லாளையும் கண்டு அங்கே தங்கினான். அவர்களும் பவுலைப் போலவே கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாக இருந்தார்கள். ஓய்வு நாள்தோறும் ஜெப ஆலயங்களில் பிரசங்கித்து வந்தான். ஜெப ஆலய தலைவனாகிய கிறிஸ்பு என்பவன் குடும்பத்தோடு இரட்சிக்கப்பட்டான். கர்த்தர் பவுலுக்கு தரிசனமாகி அவனை தைரியப்படுத்தினார். ஒரு வருஷமும் 6 மாதமும் அங்கே தங்கி வேத வசனத்தை போதித்து வந்தான். ஆனாலும் அநேக யூதர்கள் பவுலுக்கு விரோதமாக எழும்பி கல்லியோன் என்னும் அதிபதி முன் நிறுத்தினர். அவன் அவர்களை விடுதலை செய்தான்.

திருப்புதல் :

- ஆக்கில்லா பிரிஸ்கில்லாவின் தொழில் என்ன? (3)
- ஜெப ஆலயத்தலைவன் யார்? அவனைப்பற்றி எழுது? (8)
- பவுலை தேவன் எவ்விதமாக தைரியப்படுத்தினார்? (9, 10)

* பவுல் எவ்வளவு நாள் கொரிந்து பட்டணத்தில் தங்கினான்? (11)

கருத்து :

நம்முடைய உபத்திரவங்கள் மத்தியிலும் தேவனை நாம் நோக்கிப் பார்க்கும்போது அவர் நம்மை தைரியப்படுத்தி உபத்திரவங்களை மாற்றுவார்.

*****

பாடம் 20 : பிரதான ஆசாரியன் ஸ்கேவா

நோக்கம் : பிசாசுகளும் நாம் யார் என்பதை அறிந்திருக்கின்றன.

ம.வசனம் : யோ 11 : 27

கதை :

விடுமுறை நாட்களில் ப்ரியாவும், பிரின்சும் ஒரு தகாத இடத்தில் மேஜிக் என்று பொழுதைக் கழித்தனர்! இது ரூஸ்வெல்ட்டுக்கு தெரிந்ததும் மிகவும் வருந்தினான்! ஏனென்றால் ப்ரியாவும், பிரின்சும் அவனது தங்கையும், தம்பியும். அவர்கள் பிசாசின் சக்தியை பூஜிக்கும் ஒரு கும்பலில் பழக்கமானார்கள். அவர்களை நல்வழிப்படுத்த ரூஸ்வெல்ட் விரும்பினான். சாதாரணமாய் புத்தி சொன்னால் கேளார்கள். எனவே மிகவும் அன்பாய் பேசி அவர்களுடனேயே சென்றான். கடுமையான உபவாசத்துடன் மனம் நிறைந்த ஜெபத்துடன் அங்கு போனான்.

அந்த இடமே மனதுக்கு எரிச்சலை தந்தது. அங்கிருந்த வெளிச்சம், அலங்காரம் எல்லாம் இருளை அதிகப்படுத்துவதாக இருந்தது. அநேகர் உள்ளே இருந்தனர். பிசாசின் உதவியுடன் மந்திர, தந்திரங்களை மேஜிக் என்று சொல்லிக் கொண்டிருந்தவன் திடீரென்று விழிக்க ஆரம்பித்தான்! அவனுக்குள் இருந்த சக்தி மறைந்து விட்டதாக உணர்ந்தான்! இதற்கு யார் காரணம் என்று அசுத்த ஆவியால் அறிந்து ரூஸ்வெல்டை வெளியே போகச் சொல்லி விரட்டினான்! இதை எதிர்பார்த்த ரூஸ்வெல்ட் "ஸ்தோத்திரம் இயேசப்பா!" என்று சொல்லிக்கொண்டே தன் தம்பி, தங்கையை பார்த்தான். அண்ணனை தங்கள் நண்பன் விரட்டுவது அவர்களுக்கு கோபமாகிவிட்டது! "வா, அண்ணா! போகலாம் என்று வெளியே வந்தனர். கதவு இவர்கள் வெளியே வந்ததும் அறைந்து சாத்தப்பட்டது.

இப்பொழுது ரூஸ்வெல்ட் பேசினான். "அந்த ஆள் ஏன் என்னை விரட்டினான், தெரியுமா? நான் ஆண்டவரின் பலத்துடன் வந்திருக்கிறேன். என்னுடன் இயேசப்பா இருப்பதால் அவனுக் குள்ளிருந்து பிசாசு ஓடிவிட்டது! தன் பலம் குன்றியது என்னால்தான்

என்பதால் அவன் என்னை விரட்டிவிட்டான்! இப்பொழுது நாம் வந்து விட்டதும் அந்த பிசாசை அழைத்து ஐக்கியப்படுத்திக் கொள்வான். இப்பொழுது உங்களுக்கு மீண்டும் அங்கு போக வேண்டுமா? என்றான். இருவரும் அவசரமாக, "வேண்டாம் அண்ணா! எங்களை எவ்வளவு பெரிய ஆபத்திலிருந்து காத்திருக்கிறீர்கள்? பிசாசுக்களுக்கு கூட ஆண்டவரை தெரிகிறது. நாங்கள் மடத்தனமாக மேஜிக் என்று நினைத்துவிட்டோம்! நல்ல வேளை இப்பொழுது நீங்கள் எங்களை ஆண்டவரின் அன்புக்குள் கொண்டு வந்து விட்டீர்கள்! இல்லாவிட்டால், நாங்களும் பிசாசின் பிடியில் சிக்கியிருப்போம் என்றனர்.

வேத கதை : அப் : 19 : 11 - 20

பவுல் கொரிந்து பட்டணத்தில் இருந்து எபேசு பட்டணம் சென்றான். அங்கு ஞானஸ்நானம் பெற்றிருந்த ஜனங்கள் மேல் கைவைத்த போது பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மேல் வந்தார். பவுலின் கைகளினால் தேவன் அநேக அற்புதங்களை செய்தார். அவன் சரீரத்தில் உள்ள உறுமால்களையும், கச்சைகளையும் வியாதிக்காரர்கள் மேல் போட்டார்கள். அவர்கள் வியாதி குணமாயின. பிசாசு பிடித்தவர் குணமாகினர். இதைப் பார்த்த பிரதான ஆசாரியானாகிய ஸ்கேவா என்னும் ஓர் யூதருடைய குமாரர் 7 பேர் இப்படி செய்தார்கள். ஆனால் அவர்களால் கூடாமல் போயிற்று. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப் பட்டது. அநேகர் விசுவாசிகளானார்கள். மாய வித்தைக்காரர் தங்கள் புத்தகங்களை சுட்டெரித்தார்கள்.

திருப்புதல் :

- எபேசு சபை விசுவாசிகள் எப்படி பரிசுத்த ஆவியை பெற்றார்கள்? (6)
- பவுல் மூலமாக நடந்த அற்புதம் என்ன? (12)
- பவுலைப்போல செய்ய பிரயாசப்பட்ட ஸ்கேவாவின் குமாரர்களுக்கு நிகழ்ந்தது என்ன? (14, 15, 16)
- பவுலின் செய்கையைக்கண்ட மாயவித்தைக்காரர் செய்தது என்ன? (19 a)
- அந்தப் புத்தகங்களின் விலை என்ன? (19 b)

கருத்து :

பிசாசு பவுலையும் கிறிஸ்துவையும் யார் என்று அறிந்திருந்தன. அப்படியானால் நீங்கள் இயேசுவை கிறிஸ்து என அறிந்து விசுவாசிக்கிறீர்களா?

பாடம் 21 : எபேசியரின் தியானாளி

நோக்கம் : கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் எழும்பும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்.

ம. வசனம் : ஏசாயா 54 : 17

கதை :

ஆரோக்கியசாமி பெரிய தொழிலதிபராக விளங்க முயற்சித்தான். கடுமையான வியாபாரம் செய்தாலும் தொழில் போட்டியால் அவன் மிகுந்த நஷ்டங்களையும், ஏமாற்றங்களையும் சந்திக்க நேர்ந்தது! மனம் தளராத ஆரோக்கியசாமி தினமும் இயேசப்பாவிடம் தன் வேதனைகளை சொல்லி அழுது, ஜெபித்து ஒப்புக் கொடுப்பான். புது விசுவாசத்துடன் மறுநாளே துவக்குவான்! இப்படியே பல காலம் சென்றது! அநேக துன்பங்களை கடந்து வந்ததால், பல நுணுக்கங்களை அவன் கற்றுக் கொண்டு, அவற்றை விரைவாக சமாளிக்கலானான். கர்த்தர் தந்த புது பெலத்தால் இவ்பொழுது சிறந்த தொழிலதிபராகவும், தொழில் நிபுணராகவும் விளங்குகிறான். கர்த்தர் அவனை கைவிடவில்லை.

வேத கதை : அப் 19 : 21 - 41

பவுல் ஆசியாவிலேயே தங்கியிருந்த நாட்களில் இந்த மார்க்கத்தை குறித்து பெரிய கலகம் உண்டாயிற்று. எப்படி என்றால் தெமேத்திரியு என்பவன் தியானாளின் கோயிலைப்போல சிறிய கோயில்களை வெள்ளியினால் செய்து விற்று வந்தான். கைகளினால் செய்யப்பட்ட தேவர்கள் தேவர்கள் அல்ல என்று பவுல் பிரசங்கித்திருந்ததால் இவனுடைய தொழில் பாதிக்கப் பட்டது. இதனால் பட்டணம் முழுவதும் கலகத்தினால் நிறைந்தது. பவுலுக்கு வழிதுணையாய் சென்றவர்கள் பிடிபட்டனர். 2 மணி நேரம் ஜனங்கள் சத்தமிட்டனர். அலெக்சந்தர் என்பவன் எழும்பி பவுலுக்கு ஏற்றார் போன்ற வார்த்தைகளை பேசினான். இவ்விதமாய் பவுலுக்கு விரோதமாக மணிக்கணக்காக பேசியவர்களின் பேச்சு வாய்க்காதே போனது.

திருப்புதல் :

- ❊ தட்டான் தெமேத்திரியு தொழிலாளிகளுக்கு எப்படி ஆதாயம் உண்டாக்கி கொடுத்தான்? (24)
- ❊ தட்டானுக்கு தன் தொழில் பாதித்துவிடுமோ என்று ஏன் பயம வந்தது? (26)
- ❊ கலகத்தை கட்டுபடுத்த யாரை முன்னிற்க பண்ணினர்? (33)
- ❊ யூதர்கள் அலெக்சாந்தருக்கு முன்பாக என்ன சொல்லி, எவ்வளவு நேரம் சத்தமிட்டனர்? (34)

கருத்து :

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக வாழ்ந்தால் உங்களுக்கு விரோதமாக பேசுகிறவர்களின் பேச்சோ, வன்கண்ணோ, பொறாமையோ எதுவும் உங்களை சேதப்படுத்தாது.

*****

பாடம் 22 : தனது ஊழியத்தை நிறைவேற்றிய பவுல்

நோக்கம் : தேவன் நமக்களித்த ஊழியத்தை நாம் கவனமாய் நிறைவேற்றிட வேண்டும்.

ம.வசனம்: II தீமோ 4:5

கதை :

ரோஸ்லிண்ட் பிளஸ் டு மாணவி. ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியை. மிகவும் விருப்பமாக தன் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பாள். போன வருடம் அப்பாவுக்கு போனஸ் வந்ததில் ஒரு டி.வி வாங்கினார்கள். அதில் புதிதாக நிகழ்ச்சிகளை பார்ப்பதில் எல்லோருக்கும் ஆனந்தமாயிருந்தது. வர.வர ரோஸ்லிண்ட் படிப்பில் கவனமிழந்தாள். மறுநாளின் நிகழ்ச்சி நிரலை பார்ப்பதால் ஞாயிறு ஆராதனை, ஓய்வு நாள் பாடசாலை ஆகியவை கசக்க ஆரம்பித்தது. ஒரு நாள் தலைவலி என்று பொய் கூறிவிட்டு ஆராதனைக்கு செல்லாமல் மனம் போலே டி.வி. பார்த்தாள். பிறகு அடிக்கடி இவ்விதம் செய்ய ஆரம்பித்தாள்.

இதன் விளைவாக மார்க்குகள் குறைந்து போயின. இதை எப்படி வீட்டில் சொல்லுவது என்கிற சங்கடத்துடன் வீட்டுக்கு திரும்புகையில் யாரோ ஒரு சிறுவன், மற்றவளைக் கெட்ட வார்த்தைகளில் திட்டுவதும், அடிப்பதும் கண்டாள். நெருங்கி பார்த்தால் அவளது ஓய்வு நாள் பாடசாலை மாணவன். அவனை அவள் உரிமையுடன் கண்டித்தாள். ஆனால் அவனோ, "நீங்கதான் இப்போ கதை சொல்லித் தருவதில்லையே? ஏன் கேட்கறீங்க என்றான்? ரோசலிண்ட் இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை. இப்படிப்பட்ட பிள்ளைகளுக்குத் தான்தான் பொறுப்பு என்று உணர்ந்தாள். பிள்ளைகளின் வாழ்வு சீரழிந்தால் அதற்கு கடவுள் தன்னிடம் கணக்கு கேட்பார் என உணர்ந்தாள். டி.வி. நிகழ்ச்சிகளை வெறுத்து ஊழியம் கெடாமல் வாழ கற்றுக் கொண்டாள். கர்த்தருக்கே முதல் இடம் கொடுத்தாள்.

வேத கதை : அப் 20:1-38

எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்த போதிலும் பவுல் ஒவ்வொரு பட்டணமாக, நாடாக சென்று தேவன் அவருக்கு அளித்த ஊழியத்தை நிறைவேற்றி வந்தார். அவ்வாறு ஒருநாள் பவுல் நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான். அது ஒரு மேல் வீட்டிலே

சீஷர்கள் மத்தியிலே நடத்தப்பட்டது. அப்பொழுது ஐத்திகு என்னும் வாலிபன் ஜன்னலில் உட்கார்ந்திருந்து தூக்கத்தினால் மூன்றாம் மெத்தையிலிருந்து கீழே விழுந்து மரித்தான். பவுல் அவனை அணைத்து இவன் உயிர் இவனுக்குள் இருக்கிறது என்றான். அந்த வாலிபன் உயிரடைந்தான். பெந்தேகொஸ்தே பண்டிகை நாளிலே பவுல் எருசலேமில் இருக்க வேண்டும் என்று தனது பிரயாணத்தை துரிதப்படுத்தினார். வழியில் எபேசுவின் மூப்பர்களை வரவழைத்து பேசினார். 'நான் இனி இங்கு வரமாட்டேன் மூன்று வருஷ காலமாய் இரவும் பகலும் கண்ணீரோடே இடைவிடாமல் உங்களுக்கு நான் புத்தி சொல்லியதை நினைத்து விழித்திருங்கள்' என்று பவுல் உருக்கமாக பேசினார். அனைவரும் கண்ணீரோடு பவுலை வழி அனுப்பினர்.

திருப்புதல் :

- பவுல் எவ்வளவு நேரம் பிரசங்கித்தான்? (7)
- பவுலின் பிரசங்கத்தை கேட்க வந்த வாலிபன் யார்? அவனுடைய நிலை என்ன? (9)
- ஐத்திகு உயிரடைந்தானா? எப்படி? (10, 12)
- பவுல் எருசலேம் செல்ல தீவிரப்பட்டது ஏன்? (16)
- எபேசுவின் மூப்பர்களிடம் பவுல் கூறியது என்ன? (19, 20, 21, 31)
- பவுல் ஊழியத்தின் மூலம் பணம் சம்பாதித்தாரா? (33, 34)

கருத்து :

பவுல் தனக்கு தேவன் கொடுத்த ஊழியத்தை கவனமாக நிறைவேற்றினார். இன்றும் தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கிற ஊழியம் எது என அறிந்து கவனமாக ஜெபத்துடன் செய்யுங்கள்.

*****

பாடம் 23 : எருசலேமுக்கு சென்ற பவுல்

நோக்கம் : கிறிஸ்துவுக்காய் நாம் பாடுகளை சகிக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும்.

ம. வசனம் : ரோமர் 8 : 18

கதை :

விமலன் புதிதாக வேலைக்கு ஒரு நிறுவனத்தில் சேர்ந்தான். கிறிஸ்துக்குள் பக்தி வைராக்கியமாய் வாழ்பவன்! ஆலயத்தின் பாடகர் குழுவிலும் வாலிபர் சங்கத்திலும் அங்கத்தினன்! ஒரு நாள்

அவனது அலுவலகத்தில் ஆய்த பூஜை கொண்டாடினர். அதில் விமலன் கலந்து கொள்ளவில்லை, காணிக்கையும் கொடுக்க வில்லை. எனவே அவனுடன் வேலை செய்பவர்கள் அவனை பகைத்தார்கள்! வேலைக்கு ஒரு நிமிடம் பிந்தி போனாலும் தண்டனை பெற்றான். பொறுமையாய் இருக்கும் அவனை வீண் வார்த்தைகளால் வேதனை படுத்தினார்கள். அவனை பட்டப்பெயர் வைத்து அழைத்தார்கள். இதெல்லாம் தெரிந்து இருந்தும் அவன் எல்லோரிடமும் அன்பாகவே இருந்தான்!

இதைக் குறித்து எல்லோருக்குமே ஆச்சரியம்தான்! என்றாலும் இவனிடம் என்னவோ ரகசியம் இருப்பதாக அவர்கள் உணர்ந்தனர்! ஒரு நண்பன் மட்டும் விமலனிடம் மெதுவாக கேட்டான், "இவ்வளவு உபத்தரவு படுத்துகிறார்களே, நீ எப்படிபொறுமையாக இருக்கிறாய்? என்னாலெல்லாம் முடியாது!" என்றான். விமலன் தன் மேஜை ட்ராயரைத் திறந்தான். அங்கு வேதப் புத்தகம் இருப்பதை காட்டினான். "இந்த வேத புத்தகத்தின் வசனங்கள் எனக்கு அமிர்தம் போன்றது. எவ்வித துன்பம் வந்தாலும் என்னை காப்பது இதுதான்!" என்றார்.

இவ்விதமாய் வேதம் வாசித்து ஜெபிப்பதை பரலோகமாய் நாம் கொண்டிருக்கிறோமா?

வேத கதை : அப் 21 : 7 - 29

கடல் பிராயணத்தை முடித்து பவுலும் அவனோடு இருந்தவர்களும் செசரியா பட்டணத்திற்கு சென்றனர். அங்கு பிலிப்பு என்னும் சுவிசேஷகனுடைய வீட்டில் தங்கினார்கள். அவனுக்கு தீர்க்க தரிசனம் சொல்லுகிற கன்னியாஸ்திரிகளாகிய நான்கு குமாரத்திகள் இருந்தார்கள். அங்கு தங்கி இருக்கையில் அகபு என்னும் பெயர் கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். "எருசலேமில் உள்ள யூதர்கள் பவுலை கட்டி புற ஜாதியார்கள் கையில் ஒப்புக்கொடுப்பார்கள்" என்று அகபு தீர்க்க தரிசனம் உரைத்தான். ஆனாலும் பவுல், "எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காக கட்டப்படுவதற்கு மாத்திரம் அல்ல. மரிப்பதற்கும் ஆயத்தமாகயிருக்கிறேன்" என்றான். அதே தைரியத்தோடு எருசலேம் சென்றான்.

திருப்புதல் :

- செரியா பட்டணத்தில் பவுல் யார் வீட்டில் தங்கினான்? (8)
- பிலிப்பு என்னும் சுவிசேஷகனுக்கு எத்தனை பிள்ளைகள்? (9)
- அகபு யார்? எங்குள்ளவன்? (10)
- அகபு பவுலைக்குறித்து சொன்ன தீர்க்கதரிசனம் என்ன? (11)

* அகபு சொன்ன தீர்க்கதரிசனத்தைகேட்டு பவுல் கூறியது என்ன?(13)

கருத்து :

இயேசு பிள்ளைகளாக இருப்பதினால் வரும் பாடுகளை சகித்துக்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டும். அதைக் கண்டு பயந்து பாடுகளும் வேண்டாம், இந்த இயேசுவும் வேண்டாம் என்று சொல்லி ஒதுங்கிவிடாதீர்கள்.

*****

பாடம் 24 : பவுல் கைது செய்யப்படுதல்

நோக்கம் : கிறிஸ்து நம்மை சந்தித்த விதத்தை பிறருக்கு நாம் தயங்காமல் அறிவிக்க வேண்டும்.

ம. வசனம் : யோ 4:39

கதை :

இதைக் கதை என்று சொல்லக்கூடாது! ஏனென்றால் இது உண்மையாய் நிகழ்ந்த சம்பவம்!

சோமன் விக்கிரக ஆராதனையில் உறுதியாக உள்ள ஒரு குடும்பத்தை சேர்ந்தவன். அதிலும் இயேசு என்றாலே மிகவும் மட்டமாக நினைப்பவன். சோமனின் தந்தை பூஜாரி. அவனது தாய்க்கு பயங்கரமான பிசாசு பிடித்திருந்தது. தமக்கைக்கு தீராத வயிற்றுவலி. அண்ணன் ஆஸ்துமா நோயாளி. இப்படிப்பட்ட சூழ்நிலையில் வளர்ந்த சோமன் மெய்சமாதானமும், மன நிம்மதியும் இன்றி வாழ்ந்தான். பல விதமான தெய்வங்களுக்கும் ஆராதனை செய்து, பூஜைகள் செய்து, சொத்துக்களை இழந்தனர். வறுமைப் பேயும் அவர்களை பிடித்துக் கொண்டது. அண்ணனும் இறந்து போனான். ஒரு நாள் வேதனையுடன் வீடு திரும்பிய சோமன் தன் அக்காவை கண்டு திடுக்கிட்டான். ஏனென்றால் அவள் மிகவும் சுகமாகவும், சந்தோஷமாகவும் இருந்தாள். காரணம் கேட்டான்! பக்கத்து வீட்டு அம்மா தான் சென்ற ஜெபத்திற்கு அவளை அழைத்து சென்றாளாம்! அங்கு ஜெபம் செய்ததில் அவள் வயிற்று வலி சுகமானதாம். மன சமாதானம் ஆனதாம். இனி இயேசுவைத்தான் வழிபடப் போவதாக கூறினாள். சோமன் இதை ஒத்துக்கொள்ளவில்லை. ஒரு நாள் இரவு அவள் தாயார் மிகுந்த பிசாசின் உபத்திரவத்தில் கஷ்டப்பட்டார்கள். பேயோட்டிகளும், பூஜாரிகளும் விடிய விடிய போராடி விரட்டினர். அப்போது பிசாசு சொன்னதாம் "ஏண்டா இப்படி வீணாய் கஷ்டப்படுறீங்க? நீங்களெல்லாம் விரட்டினால், நான் போவேனோ?" என்று

சோமன் கோபமாக, "அப்போது, யார் விரட்டினால் போவாய்? என்றான். "சிலுவையில் செத்தாரே அவருக்குத்தான் நான் பயப்படுவேன்". உடனே சோமன் திடுக்கிட்டான்! அக்காவை பார்த்தான்.

மறுநாள் அக்கா மூலமாக, மனதுக்கு பிடிக்காவிட்டாலும், ஜெபம் செய்ய அம்மாவை அழைத்து போனான்! என்ன ஆச்சரியம்! பலகாலம் பட்ட கஷ்டத்திலிருந்து, பிசாசின் பிடியிலிருந்த அம்மா விடுதலை பெற்றார்! தகப்பனுக்கும், மகனுக்கும் நம்ப முடியவில்லை! பிறகு, தினசரி வாழ்வில் நிம்மதியை உணர்ந்தபின் நால்வரும் மனம் திரும்பி ஞானஸ்நானம் பெற்றார்கள். ஆனால் மற்றவர்களை விட சோமன் என்ற 'சாம்சன்' தன் பழைய நண்பர்களிடம் தன் மனமாறுதல்களை சொல்ல சங்கடப்பட்டான். அவனது தோற்றம், நடை, உடை பாவனைகளில் மாற்றத்தையும், வேத புத்தகத்துடன் ஜெபத்துக்குப் போவதையும் கண்டு கேட்டவர்களிடமும் மழுப்பினான். மாற்கு 7 : 36 ஐ ஒருநாள் பிரசங்க வாக்கியமாக ஒரு போதகர் பேச கேட்டான். அவன் மனம் தெளிந்தது! அன்றிலிருந்து நன்றி மறவாத உள்ளத்துடன் சாட்சி கூற ஆரம்பித்தான்! கர்த்தர் அவரை பிரசங்கியாராக மாற்றினார்! இப்போது மேடை தோறும் முழங்கும் பிரசங்கியாராக இருக்கிறார் சாம்சன்!

வேத கதை : அப் 21: 27 - 40; 22:1- 21

ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் எருசலேம் தேவலாயத்திலே பவுலைக் கண்டு, ஜனங்கள் எல்லாரையும் ஏவிவிட்டு ,அவன் மேல் கைபோட்டு 'இந்த பரிசுத்த ஸ்தலத்தை தீட்டுப் படுத்தினான்' என்று சத்தமிட்டார்கள். நகரம் முழுவதும் கலக்கம் உண்டானது. சேனாதிபதி அவனை 2 சங்கிலியினாலே கட்டச் சொன்னான். பவுலை கோட்டைக்குள்ளே கொண்டு செல்லும்போது, பவுலின் வேண்டுதலின்பேரில், ஜனங்களோடு பேச சேனாதிபதி அனுமதி கொடுத்தான். அதன்பின் பவுல் பேசத்தொடங்கினான். 'நான் யூதன், சிலிசியா நாட்டிலுள்ள தர்சு பட்டணத்தான். இந்த மார்க்கத்தாராகிய ஜனங்களை துன்புறுத்தி வந்தேன். ஒருநாள் ஒரு ஒளியின் மூலம் தேவன் என்னை இரட்சித்தார். அதன் பிறகு இயேசுவைப் பற்றி சொல்ல என்னை அர்ப்பணித்தேன். 'நீ போ நான் உன்னை தூரமாய் புற ஜாதிகளிடத்திலே அனுப்புவேன்' என்று தேவன் என்னை தைரியப்படுத்தினார். இப்படி பவுல் கிறிஸ்து தன்னை சந்தித்த விதத்தை அறிவித்தான்.

கேள்விகள் :

- ஆசியா நாட்டிலிருந்து வந்த யூதர்கள் பவுலிடம் என்ன குற்றம் சாட்டினார்? (28)
- பவுல் ஜனங்களோடு என்ன பாஷையில் பேசினான்?(40)
- பவுல் யார்?(3)
- பவுல் தமஸ்குவிற்கு ஏன் சென்றான்?(5)
- பவுலை இயேசு எப்படி சந்தித்தார்? (6)
- பவுல் ஏன் பார்வையற்று போனான்? (11)
- அனனியா யார்? (12)
- பவுல் எப்படி பார்வையடைந்தான்? (13)
- பவுல் எப்படி பாவ அறிக்கை செய்தான்? (19,20)
- தேவன் பவுலை எங்கு அனுப்ப சித்தம் கொண்டார்? (21)

கருத்து :

கிறிஸ்து உங்கள் பாவங்களை மன்னித்து உங்களை இரட்சித்த விதத்தை உங்களோடு பயிலும் பிள்ளைகளுக்கு கண்டிப்பாக சொல்லுங்கள். அப்படி நீங்கள் சொல்லும் போது அவர்களும் இரட்சிக்கப்பட உதவியாக இருக்கும்.

*****

பாடம் 25 : ஆலோசனை சங்கத்திற்கு முன் பவுல்

நோக்கம் : தேவனுக்காய் நாம் சாட்சிகளாய் நிற்கும் போது நமக்கு வரும் ஆபத்துகளிலிருந்து அவர் நம்மை விலக்கிவிடுவிக்கிறார்.

ம. வசனம் : அப் 3:15

கதை :

அருள் தன் வகுப்பில் முதல் மார்க் வாங்கும் சிறுவன். அவன் வகுப்பிலிருந்த பிற மதத்துப் பிள்ளைகள் சிலருக்கு அருளைப் பிடிக்காது. ஏனென்றால் அவன் திருடாமல், பொய் சொல்லாமல், காப்பியடிக்காமல், கெட்ட வார்த்தைகள் பேசாமல் இருக்கவும் அந்த பிள்ளைகளுக்கு இவன் வித்தியாசமானவனாய் தெரிந்தான். அந்த பிள்ளைகள சில சமயம் வீண் பழி சுமத்தி இவனைக் குற்றவாளியாக ஆக்கும்பொழுது உண்மை தெரிந்த பின், அவனது ஆசிரியர்களே வருந்துவார்கள்.

ஒரு நாள் அருள் மரத்தடியில் கடந்து வரும்போது, அவனை விரோதித்த நண்பர்கள் மரத்தின் மேலிருந்து அவன் மீது கல்லெறிய காத்திருந்தனர். ஆனால் அருள் அந்த மரத்தடிக்கு போகும் முன் மரக்கிளை முறிந்து விழுந்து அவர்கள் அடிபட்டு போயினர்.

ஆண்டவர் தன் பிள்ளையை காத்ததோடு, அவர்களுக்கு அவனே முதலுதவி செய்யும்படி ஏற்படுத்தினார். அவனது அன்பை கண்டு வெட்கி நாணிய அந்த சிறுவர்களும் அருளுக்கு நண்பர்களாயினர்.

வேத கதை : அப் 23:1-30

பவுலின் மேல் சாட்டப்பட்ட குற்றம் பற்றி நிச்சயமாய் அறிய விரும்பிய சேனாதிபதி பவுலை ஆலோசனை சங்கத்திற்கு முன் நிறுத்தினான். அங்கு கூடியிருந்த ஜனங்கள் இரண்டு பிரிவாக இருந்தனர். ஒரு கூட்டத்தினராகிய சதுசேயர் உயிர்தெழுதலும், தேவதூதனும் ஆவியும் இல்லையென்று கூறினர். பரிசேயரோ அவ்விரண்டும் உண்டென்று ஒப்புக் கொண்டனர். ஆகையால் மிகுந்த கூக்குரல் உண்டாயிற்று. மிகுந்த கலகம் உண்டானபோது பவுல் பீறுண்டு போவான் என்று பயந்து போர்சேவகர் அவனை இழுத்து கோட்டைக்கு கொண்டு சென்றனர். இரவில் கர்த்தர், 'பவுலிடம் நீ எருசலேமில் சாட்சி கொடுத்தது போல ரோமாபுரியிலும் சாட்சி கொடுக்க வேண்டும்' என்று கூறினார். விடியற்காலமே யூதரில் நாற்பது பேர் 'நாங்கள் பவுலை கொலை செய்யும் வரை புசிப்பதும் இல்லை, குடிப்பதும் இல்லை' என்று சபதம் பண்ணிக்கொண்டனர். அதன்படி இவர்கள் பிரதான ஆசாரியரிடம் போய் 'பவுலை நீங்கள் திட்டமாய் விசாரிப்பதாக கூட்டி வாருங்கள். நாங்கள் கொலை செய்ய ஆயத்தமாயிருப்போம்' என்றார்கள். ஆனாலும் இந்த செய்தி அறிந்த பவுலின் சகோதரியின் மகன் சேனாதிபதியிடம் கூறினான். உடனே அவன் பவுலை பலத்த பாதுகாப்புடன் தேசாதிபதியாகிய பேலிக்சிடம் அனுப்பினான்.

திருப்புதல் :

- ✳ பவுல் ஆலோசனை சங்கத்திலே நின்றபோது ஜனங்கள் எத்தனை பிரிவாக வாதித்தனர்? ஏன்? (7,8)
- ✳ வேதபாரகரில் சிலர், 'இந்த மனுஷனிடத்தில் ஒரு பொல்லாங்கையும் காணோம்' என்று சொல்ல காரணம் என்ன? (9)
- ✳ நாற்பது யூதர்களின் சபதம் என்ன? (12)
- ✳ பவுலை கொலை செய்ய அந்த நாற்பது பேரும் போட்ட திட்டம் என்ன? (15)
- ✳ நாற்பது பேரின் திட்டத்தை முறியடித்தது யார்? (16)
- ✳ சேனாபதி பவுலை பிரதான ஆசாரியரிடம் அனுப்பாமல் யாரிடம் எப்படி அனுப்பினான்? (23,24)

கருத்து :

எருசலேமில் கிறிஸ்துவுக்கு சாட்சியாக நின்ற பவுல்

சிறைச்சாலையில் இருந்த போதிலும், தேவன் அவனை அற்புதமாக காத்தார். நீங்கள் எப்படி வாழ்கிறீர்கள்? தேவனுக்கு சாட்சியாக வாழ்கிறீர்களா?

*****

பாடம் 26 : பேலிக்ஸ் முன்பாக பவுல்

நோக்கம் : தேவன் தமது பிள்ளைகளுக்கு உயர் அதிகாரிகளின் கண்களிலும் தயவு கிடைக்கச் செய்கிறார்.

ம.வசனம் : யாத் 3 : 21

கதை :

'டல்சி' ஒரு அலுவலகத்தில் கணக்கராக பணிபுரிகிறாள். சிறு வயதில் ஓய்வு நாள் பாடசாலையிலும், வாலிப நாட்களில் வாலிப பிள்ளைகளின் வகுப்பிலும் பங்கேற்று படித்தவள்! இந்த வேலை கிடைத்ததும் உறவினர்களும், நண்பர்களும் அவளது பக்தியினால்தான் இந்த வேலை கிடைத்தது. நல்ல பிள்ளை, கைநிறைய சம்பாதிக்கிறாள் என்று புகழ்ந்தனர். வேலை ஸ்தலத்திலும் அவளது சுறுசுறுப்பையும், வேலை செய்யும் நேர்த்தியையும் பாராட்டினர்!

ஆனால் அவளுக்கு ஒரு பெரும் குறை இருந்தது. அவளது மேலதிகாரி தாஸ் அவளிடம் வேண்டாத வார்த்தைகளை பேசுவதும் வீணான தண்டனைகள் கொடுப்பதுமாக உபத்திரவபடுத்தி வந்தார். ஒரு நாள் அவருக்கும் மேலதிகாரி வந்து 'இன்ஸ்பெக்ஷன்' நடத்தப் போவதாக இருந்தது. எல்லாரும் தங்கள் வேலைகளை சரிபடுத்திக் கொண்டு இன்ஸ்பெக்ஷனுக்கு தயாராயினர். ஆனால் எல்லாருக்குமே மேலதிகாரி தாசின் மோசமான குணத்தைப்பற்றி பயம் இருந்தது! அதாவது தனக்கு பிடிக்காதவர்களை பற்றி உயர் அதிகாரியிடம் 'கோள்' சொல்லி பெரிய அளவில் தண்டனை வாங்கி கொடுப்பார்! அநேகமாக இந்த முறை டல்சிக்கு ஏதும் தண்டனை கிடைக்கும் என்றே நினைத்தனர்.

அன்று இன்ஸ்பெக்ஷனுக்கு உயர் அதிகாரி வந்து விட்டார். அனைவரும் 'மீட்டிங் காலில்' ஒன்று கூடிய போது கர்த்தர் ஒரு அற்புதத்தை செய்தார். உயர்அதிகாரி ஸ்டெல்லா மேடம் வேறு யாருமல்ல, டல்சியின் முன்னாள் ஞாயிறுபள்ளி ஆசிரியை. ஸ்டெல்லா அவள் கையைப் பிடித்துக் கொண்டு, 'என்ன டல்சி? இந்த அலுவலகத்தில் யாரும் உன்னிடம் பிரச்சனை பண்ணுகிறார்களா? சொல்லு. உடனே ஆக்ஷன் எடுக்கிறேன்! நீ சொன்னால் சரியாயிருக்கும் என்றார். டல்சியோ, 'அதெல்லாம் ஒன்றுமில்லை,

ஆன்டி!' இங்கு நாங்கள், ஒரு குடும்பம் போலத்தான் பழகுகிறோம். ஒன்றும் பிரச்சனை இல்லை' என்றான்.

அதன்பிறகு அந்த உபத்திரவம் தந்த அதிகாரி தான் உண்டு, அவர் வேலையுண்டு என்றிருந்தார்.

வேதக் கதை: அப் 24:1-23

சேனாபதியாகிய லீசியா பவுலை பேலிக்ஸ் என்னும் தேசாதிபதியினிடத்திற்கு அனுப்பினான். பவுல் அங்கு இருக்கையில் அனனியா என்னும் பிரதான ஆசாரியனும், தெர்த்துல்லு என்னும் நியாய சாதுரியனும் வந்து தேசாதிபதியினிடம் பவுலை பற்றி குறை கூறினர். அதற்கு பவுல் 'நான் எருசலேமிற்கு போனது முதல் 12 நாட்கள் மட்டும் ஆயிற்று'. தேவாலயத்தில் நான் ஒருவனிடமாவது தர்க்கம் பண்ணினேனா? அல்லது கலகம் எழுப்பினேனா? இவர்கள் என் மேல் சாட்டுகிற குற்றத்தை ரூபிக்க மாட்டார்கள் என்றான். இந்த மார்க்கத்தின் விஷயங்களை விபரமாய் அறிந்திருந்த பேலிக்ஸ் இவைகளைக் கேட்டபோது, சேனாதிபதியாகிய லீசியா வரும்போது விசாரிக்கலாம் என்று சொல்லி பவுலைக் காவல் பண்ணவும், கண்டிப்பில்லாமல் நடத்தவும் அவனுக்கு ஊழியஞ்செய்கிறதற்கும் அவனை பார்ப்பதற்கும் வருகிற மனுஷரை தடை செய்யாதிருக்கவும் நூற்றுக்கு அதிபதியானவனுக்கு கட்டளையிட்டான்.

திருப்புதல் :

- பிரதான ஆசாரியனும், நியாய சாதுரியனும் செய்தது என்ன? (1)
- அவர்களின் குற்றச்சாட்டு என்ன? (5, 6a)
- அவர்களின் குற்றச்சாட்டுக்கு பவுலின் பதில் என்ன? (12)
- தேசாதிபதி செய்தது என்ன? (23)

கருத்து :

நீங்கள் ஆண்டவருடைய பிள்ளையாக இருந்தால், உயர் அதிகாரிகளின் கண்களில் தயவு கிடைக்கச் செய்வார்.

*****

பாடம் 27 : பெலிக்ஸுக்கு முன் பவுல்

நோக்கம் : நாம் ராஜாக்களுக்கு முன்பாகவும் அதிகாரிகளுக்கு முன்பாகவும் நிற்கும் போது நாம் பேச வேண்டிய வார்த்தைகளை நம் வாயில் தேவனே தருகின்றார்.

ம. வசனம் : யாத் 4:12

கதை :

கில்பர்ட் இன்று ஒரு இண்டர்வியூக்கு புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவனது நண்பர்கள் எல்லாரும் "டேய், கில்பர்ட்! உன் வீட்டில் ரொம்ப கஷ்டம்... அது! இது! என்று புலம்பாதே! பஞ்சப் பயல் என்று விரட்டி விடுவார்கள்! நீதான் நன்கு இங்கிலீஷ் பேசுவாயே. பெரிய பந்தாவாக பேசி, "இவனை மாதிரி வசதியானவன் நம்ம கம்பெனியிலே வேலை பார்க்கணும்னு நினைக்கிறமாதிரி பேசு. அப்போதுதான் வேலை கிடைக்கும்" என்று கூறியது காதில் ஒலித்தது. கில்பர்ட் எப்போதும் உண்மை பேசுவனாகவும், கடவுளுக்கு பயந்தவனாகவும் இருந்ததால் மனதில் குழப்பம் நேரிட்டது! சுகவீனமான தாய், பற்றாக்குறை வருமானத்தில் போராடும் தகப்பன், படிக்கிற இரண்டு தங்கைகள் என்று அவனது வாழ்வு சிக்கலாக இருந்தது.

இன்டர்வியூக்கு வந்தவர்களை பார்த்தாலும் எல்லோரும் மிகவும் வசதியானவர்கள் போலவும், தான் மட்டும்தான் ஏழையாக வந்திருப்பது போலவும் தோன்றியது. ஆனால், "இயேசப்பா என்னோடு இருக்கிறார். எனக்கென்ன குறை? எனக்கு ஏற்றதை தருவார்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டு, காலர், டை எல்லாம சரி பண்ணிக் கொண்டான். இவனுடைய பெயரைச் சொல்லி அழைத்தார்கள். உள்ளே சென்றான்.

உயரதிகாரிகள் மூவர் அமர்ந்திருந்தனர். அறைக்குள் நுழைந்ததும் ஏ.சி சில்லென்று தாக்கிற்று! அவர்கள் அமரச் சொன்னதும் நன்றி சொல்லிவிட்டு, வாய்க்குள்ளாக "ஸ்தோத்திரம்" என்று சொல்லிக்கொண்டே உட்கார்ந்தான். ஒருவர் அவனது சர்டிபிக்கேட்டுகளை பரிசோதித்தார். இன்னொருவர் நீ இப்போது என்ன சொன்னாய்? எனவும் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொன்னேன்" என்றான். "எல்லாவற்றிற்கும் கடவுளுக்கு நன்றி செலுத்தும் பழக்கம் உள்ள நீ இங்கு வேலை கிடைக்காவிட்டாலும் நன்றி செலுத்துவாயா?" என்று கேட்டார்.

கில்பர்ட், "ஆம் ஐயா ! என் குடும்ப சூழ்நிலை கஷ்டம்தான். இந்த வேலை கிடைத்தால் நல்லது! கிடைக்காவிட்டாலும் நல்லதுதான்! ஏனென்றால் கடவுள் எனக்கு எல்லாம் நல்லதே செய்வார்! இங்கு இடம் கிடைக்காவிட்டால், எனக்கு வேறு ஏதோ ஒரு இடத்தை நியமித்திருக்கிறார் என்று "ஸ்தோத்திரம்" கூறுவேன் என்றான். அழகான ஆங்கிலத்தில் இந்த வார்த்தைகளை அவன் எப்படி கூறினான் என்று அவனுக்கே தெரியவில்லை!

அதற்குள், "மிஸ்டர் கில்பர்ட்! இன்று முதல் இந்த கம்பெனியில் நீங்கள் பணி புரியப் போகிறீர்கள்! சற்று நேரத்தில் உத்தரவு உங்கள்

[illegible]

[illegible]

[illegible]:

* [illegible]
* [illegible] ([illegible])
* [illegible]
* [illegible]
* [illegible] (26,27)

[illegible]:

[illegible]

*****

பாடம் [illegible] : அகிரிப்பாவுக்கு முன் பவுல்

நோக்கம் : நமக்குள் இருக்கும் ஆவியின் அனல் நமது பேச்சை கேட்பவர்களையும் கிறிஸ்துவிடம் திருப்பக் கூடியதாய் இருக்க வேண்டும்.

மனனவசனம் : 1 கொரி 2 : 5

கதை :

ஷீலாவுக்கு தன் பாட்டியிடம் கதைகளையும், அவர்களது ஜெப அனுபவங்களையும் கேட்பது மிகவும் பிடிக்கும். வேதத்தின் சரித்திரங்களை சுவைபட சொல்லி கொடுப்பார்கள். வளர, வளர கேட்ட கதைகளை ஆவிக்குரிய தன்மையில் சிந்தித்து ஜெபிக்க ஆரம்பித்தாள். ஷீலாவின் விருப்பத்தை அறிந்த பாட்டியம்மாவும் ஷீலாவுக்காக அதிக பாரத்துடன் ஜெபித்தார்கள். இப்போதெல்லாம் ஷீலா, சிறு பிள்ளைகளுக்கு அருமையாக வேத போதனை செய்ய ஆரம்பித்தாள். கர்த்தர் ஷீலாவை ஆவியில் நிறைக்க ஆரம்பித்தார். பக்தி விருத்தியடைந்த ஷீலா வாலிப வயதில், ஓய்வு நாள் பாடசாலை, வாலிப பிள்ளைகள் வகுப்பு ஆகியவற்றை திறம்பட நடத்தினாள். அவளுடைய போதனை பிள்ளைகளை நல்வழிப்படுத்தியது. ஆண்டவரண்டை கொண்டு வந்தது.

நீங்க எப்படி?

வேத கதை : அப் 26

பவுல் அகிரிப்பா ராஜாவுக்கு முன்பாக நிறுத்தப்பட்டான். பவுல் பேச அகிரிப்பா ராஜா உத்தரவு கொடுத்தவுடன் பவுல் தனக்காக பேசத் தொடங்கினான். பவுல் தன்னை தேவன் ஒளியின் மூலம் சந்தித்த விதத்தையும் அதன்பின் தான் ஊழியத்திற்கு அர்ப்பணித்ததையும் கூறினான். பவுலுடைய உருக்கமான சாட்சி அதை கேட்டுக்கொண்டிருந்த அகிரிப்பா ராஜாவையே கிறிஸ்துவிடம் இழுக்கக் கூடியதாய் இருந்தது. அகிரிப்பா ராஜா, பெஸ்து, பெர்னிகேயாள் மூவரும் தனியே போய் 'இந்த மனுஷன் மரணத்திற்காவது, கட்டுக்களுக்காவது பாத்திரமானதொன்றையும் செய்யவில்லை' என்று பேசிக்கொண்டார்கள். ஆனாலும் பவுல் இராயனுக்கு அபயமிட்டிருந்ததால் அவனை விடுதலை பண்ண இவர்களால் கூடாமல் போயிற்று.

திருப்புதல் :

- ✻ பவுல் தன்னை ஏன் பாக்கியவானாக எண்ணினான்? (2)
- ✻ பவுல் சவுலாக இருந்த போது செய்தது என்ன? (9, 10)
- ✻ பவுலை தேவன் சந்தித்த நேரம் என்ன? (13 a)
- ✻ தேவன் பவுலிடம் என்ன பாஷையில் பேசினார்? (14)

❖ ஆண்டவர் தன்னை யார் என்று பவுலிடம் கூறினார்? (15)
❖ பவுல் யாருக்கெல்லாம் தன்னுடைய சாட்சியை கூறி வருகிறார்? (22)
❖ பவுலின் சாட்சியை கேட்ட அகிரிப்பா ராஜாவின் எண்ணம் என்ன? (31)

கருத்து :

பவுலின் பேச்சு அகிரிப்பா ராஜாவையே கிறிஸ்துவண்டை இழுக்கக்கூடியதாய் இருந்தது போல உங்கள் பேச்சும் மற்றவர்களும் அவரண்டை இழுக்கக்கூடியதாக இருக்க வேண்டும். மற்ற தேவையில்லாத தீமையான வெட்டிப் பேச்சுக்கள் பேசுவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

*****

பாடம் ௨௯ : ரோமாபுரிக்கு பயணம்

நோக்கம் : தேவன் நமக்கு கூறும் வார்த்தைகள் நிச்சயமாய் நடக்கும்.

வசனம் : எசேக்கியேல் 12: 25 (அ)

கதை :

மெர்லின் படிப்பில் சுமாரானவள். சற்று படிக்க தவறினால் கடைசியிலும் ஆகிவிடுவாள். இதனால் எல்லோரிடமும் எப்போதும் திட்டு வாங்கினாள். பள்ளியில் ஆசிரியைகள், வீட்டில் பெற்றோர், உடன் பிறந்தோர் என்று அவளை மட்டம் தட்டி வந்தனர். நண்பர்களும் அப்படித்தான் . இதனால் மனம் உடைந்து போன மெர்லின் ஒரு நாள் கண்ணீருடன் ஜெபித்தாள்! "என்னை உண்டாக்கிய இயேசுராஜா! நான் காலம் முழுவதும் இப்படியே மக்காகவே காலம் கழிக்க வேண்டுமா? படிக்கிறதற்கும், சிறப்பாக வேலை செய்தவற்கும் வேண்டிய அறிவை தாரும்! உமது வசனத்தின் மூலம் என்னோடு பேசும்!" என்று கண்ணீர் விட்டு அழுதாள். அதன் பின் அவள் வேதம் வாசித்த போது நீதிமொழிகள் 2 : - 6ம் வசனத்தை படித்தாள். கர்த்தர் தனக்கு பதிலளிக்கிறார் என்று புரிந்து கொண்டாள். தொடர்ந்து ஆலய ஆராதனையிலும், டி.வி. சுவிஷேச சேனல்களிலும் இதே வசனத்தின் பிரசங்கங்களை கேட்டு கர்த்தர் தன் விண்ணப்பதிற்கு பதில் தருகிறார் என மகிழ்ந்தாள். அந்த வாக்குத்தத்தை விடாமல் பற்றிக் கொண்டாள். சிறப்பாக படித்து பாராட்டு பெற்றாள். இன்று அவள் யார் தெரியுமா? டாக்டர் மெர்லின்! ஆம் கர்த்தர் தாம் கூறியதை நிறைவேற்றியே தீருவார்.

பவுல் இராயனுக்கு முன்பாக நிற்பதற்காக "யூலியு" என்னும் நூற்றுக்கு அதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டான். அவன் கப்பல் மூலம் பவுலை இத்தாலிய தேசத்துக்கு அழைத்துச் சென்றான். எதிர் காற்றாயிருந்த படியினால் சீப்புருத் தீவிலே ஒதுங்கினர். பின்பு லீசியா நாட்டு மீராப் பட்டணத்தில் சேர்ந்த போது, அலெக்சந்திரியா பட்டணத்து கப்பலில் ஏறிக்கொண்டனர். காற்று அவர்களை தடுத்த படியினாலே அவர்கள் மெதுவாக பிராயணப்பட்டனர். வெகுகாலம் சென்ற பிறகு இனி கப்பல் யாத்திரை மோசம் என்று கருதிய பவுல் அனைவரையும் எச்சரித்தான். ஆனாலும் ஒருவரும் கேட்கவில்லை. கிரேத்தா தீவில் உள்ள துறைமுகத்தில் மழை காலத்தை கழிக்கலாம் என்று அநேகர் ஆலோசனை கூறினர். ஆனாலும் அவர்கள் கேட்காமல் கப்பலை ஓட்டிச் சென்றனர். பின்பு பெருங்காற்று மழையில் மாட்டிக் கொண்டனர். எல்லோரும் வருத்தத்தோடு இருந்த போது பவுல் "மனுஷரே, திட மனதாயிருங்கள். தேவன் என்னிடம் வந்து நாம் காப்பாற்றப் படுவோம் என்று தைரியம் கூறினார் என்றான். அதன்படி கப்பலை ஒரு இடத்தில் தட்ட வைத்தார்கள். நீந்தத் தெரிந்தவர்கள் நீந்தியும் மற்றவர்கள் பலகைகள் மேலுமாக கப்பலிருந்த 276 பேரும் காப்பற்றப்பட்டனர்.

திருப்புதல் :

- இத்தாலியா தேசத்திற்கு பவுலை அழைத்துச் சென்ற நூற்றுக்கதிபதி யார்? யுலியு (1)
- வழியில் எந்த கப்பலுக்கு மாற்றப்பட்டனர்? (6)
- மழைக்காலத்தை எந்த துறைமுகத்தில் கழிக்க ஆலோசனை கூறினர்? (12)
- எந்த கடுங்காற்று கப்பலின் மேல் மோதியது? (14)
- பவுலுக்கு தேவ தூதன் அளித்த தைரியம் என்ன? (24)
- எத்தனை நாட்கள் கப்பலில் போஜனம் பண்ணாமல் இருந்தனர்? (33)
- எத்தனை பேர் கப்பலில் பிரயாணப்பட்டனர்? (37)
- கப்பல் உடைந்ததும் கப்பலில் இருந்தவர்கள் தீவுக்கு எப்படி சென்றனர்? (43, 44)

கருத்து :

கப்பலில் உள்ள அனைவரும் காப்பாற்றப்படுவீர்கள் என்று தேவன் பவுலுக்கு சொன்னதை நிறைவேற்றினார். ஆம், நீங்களும்

தேவனுக்கு பிரியமாய் வாழும் போதும் அவர் உங்களுக்கு கொடுத்த வாக்குத்தத்தத்தை நிச்சயம் நிறைவேற்றுவார்.

******

பாடம் 30 : விஷப்பூச்சிகளிலிருந்து விடுதலை

நோக்கம் : தேவ பிள்ளைகளை சாவுக்கேதுவானதும் சேதப்படுத்தாது.

ம. வசனம் : சங் 16 : 10

கதை :

இதுவும் ஒரு உண்மைச் சம்பவம்! துரைராஜ். துரைராஜ்னு ஒரு தாத்தா இருந்தார். அவருக்கு சுமார் 75 வயது இருக்கும்பொழுது ஒரு நாள் சாயங்காலம் வீட்டின் வெளி வாசலில் கிடந்த கற்களை எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார்! ஒரு கல்லை தூக்கியதும் அதனடியில் சுருண்டு படுத்திருந்த ஒன்றரை அடி நீளமுள்ள விஷப்பாம்பு அவர் காலில் கொத்தியது! உடனே அருகிலிருந்த ஒரு குச்சியை எடுத்து அதை அடித்து கொன்று விட்டு, வீட்டுக்குள் வந்து முழங்காலில் நின்று ஜெபிக்க ஆரம்பித்தார்! பாம்பு கடித்த இடத்திற்கு மேல் ஒரு கட்டு மட்டும் போட்டு, விஷம் மேலே ஏறாதபடி செய்து கொண்டார். ஜெபித்துக் கொண்டே இருந்தார். அவரது மனைவி, மகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள் எல்லாரும் கண்ணீருடன் பதறியபடி ஸ்தோத்திரம் சொல்லிக் கொண்டிருந்தனர். ஒரு மணி நேரம் கழித்து வியர்த்து வழிந்த உடலுடன் முழங்காலில் இருந்து எழுந்தார்!

பதறிக் கொண்டிருந்த தன் குடும்பத்தினரைக் கண்டு "ஏன் பதறுகிறீர்கள்"? எனக்கு ஒன்றுமில்லையே! போய் ஜெபம் செய்யுங்கள் என்றார்.

ஏனென்றால், அவர்கள் கர்த்தரின் மீது மாறாத விசுவாசம் கொண்டவர்கள். உடலுக்கு என்ன சுகவீனம் நேரிட்டாலும், விபத்து நேரிட்ட போதிலும் அவர்கள் மருந்தே சாப்பிடுவதில்லை. "கர்த்தரின் சித்தமிருந்தால் நான் உயிரோடு இருப்பேன், அல்லது சாகும் நேரமானால் அவரோடு போய்விடுவேன்! அவரது சித்தமின்றி நம் வாழ்வில் எதுவும் நடைபெறாது" என்பார். அதுபோலவே அவர் கால் கொஞ்ச நாள் வீங்கி, வலித்தது. பிறகு ஒன்றும் செய்யவில்லை! இன்று வரை நலமாக இருக்கிறார்! இப்போது அவருக்கு வயது எவ்வளவு தெரியுமா? 90!

வேத கதை : அப் 28 : 1-16

கப்பல் சேதத்திலிருந்து 276 பேரும் தப்பி கரை சேர்ந்த இடம்

மெலித்தா தீவு. அந்த தீவார் அவர்களை அன்போடு உபசரித்தனர். நெருப்பு மூட்டி குளிரை போக்கினர். பவுல் சில விறகுகளை வாரி நெருப்பில் போடுகைளில் ஒரு விரியம் பாம்பு அவன் கையை கவ்விக் கொண்டது. உடனே அந்த தீவார் , "இவன் கொலை பாதகன்" என்றனர். பவுல் பாம்பை உதறி ஒரு தீங்கும் அடையாதிருந்ததையும் பார்த்த அந்த தீவார் இவன் தேவன் என்று சொல்லிக் கொண்டனர். பின்பு "மிதுனம்" என்ற கப்பலில் ஏறி ரோமாபுரி சென்றனர். அங்கு சென்ற பின் நூற்றுக்கு அதிபதி பவுலைக் காக்கிற சேவகனுடனே பவுலை தனித்து குடியிருக்க அனுமதித்தான்.. அதன் பின் தன் வீட்டிற்கு வந்த அனைவருக்கும் சுவிசேஷம் அறிவித்தான்.

திருப்புதல் :

- கப்பல் சேதத்தில் தப்பி பிழைத்தவர்கள் சேர்ந்த தீவு எது? (1)
- அத்தீவார் இவர்களை எப்படி நடத்தினர்?(2)
- அத்தீவில் பவுலுக்கு வந்த ஆபத்து என்ன?(3)
- அதைக்குறித்து அத்தீவாரின் கருத்து என்ன? (4)
- பூச்சியை பவுல் என்ன செய்தான்? (5)
- பூச்சியிடமிருந்து தப்புவித்த பவுலைக்குறித்து அத்தீவாரின் கருத்து என்ன? (6)
- அத்தீவின் முதலாளி யார்? (7)
- அத்தீவிலிருந்து ரோமாபுரிக்கு எந்த கப்பலில் சென்றனர்? (11)
- ரோமாபுரியில் பவுல் என்ன உத்தரவு பெற்றுக் கொண்டான்?(16)

கருத்து :

நம்மிடம் பாவம் என்ற விஷம் இல்லாவிட்டால் உலகத்தில் வாழும் எந்த விஷப்பூச்சியும் நம்மை சேதப்படுத்தாது என்பது பவுலின் இந்த சம்பவம் மூலமாக நன்கு விளங்குகிறது.

*****

மாதிரி நிகழ்ச்சி நிரல் : 1 1/2 மணி நேரம்

1. ஆரம்ப ஜெபம்	-	5 நிமிடம்
2. பாடல் நேரம்	-	20 நிமிடம்
3. நோக்கம் - கதை	-	20 நிமிடம்
4. வேதாகமக் கதை	-	20 நிமிடம்
5. மனன வசனம்	-	10 நிமிடம்
6. கேள்விகள்	-	10 நிமிடம்
7. முடிவு ஜெபம்	-	5 நிமிடம்

ஞாயிறு பள்ளி நடத்தும் முறைகள்

கிறிஸ்தவ உண்மைகளைப் பெரியோர்களுக்குப் போதிப்பதிலிருந்து சிறுவர்களுக்குப் போதிப்பது மிகவும் வேறுபட்டது. ஞாயிறு பள்ளியில் சிறுவர்களுக்கு போதிப்பதற்கு கீழ்க்கண்ட வழி முறைகளைக் கையாளலாம்.

1. கதை : நோக்கம் வேண்டும் - குரலில் ஏற்றம், இறக்கம் வேண்டும் - வாய்ச்சொல் மட்டுமல்லாது நடிப்பும் கலந்திருக்க வேண்டும்.

2. வேதாகமக் கதை: ஜெபத்தோடு வேதாகமத்தைப் படித்து, குறிப்பெடுத்து, சங்கிலித் தொடர் போல் ஒழுங்குப்படுத்திச் சொல்ல வேண்டும். முடிந்தால் இரண்டு குழுவாகப் பிரித்து, வேதாகமக் கதையைச் சொல்லலாம் (below 5th & above 5th Std.)

3. பாடல் : சிறியதாயிருக்க வேண்டும் - எளிதான இராகம் - பாடலுக்கு செய்கை இருத்தல் வேண்டும்.

4. குறு நாடகம் : இதன் சிறப்பு என்னவென்றால், சிறுவர்களுக்கு ஓர் இயல்பான உற்சாகம், எளிதில் மனதில் வைத்துக் கொள்ளும் வாய்ப்பு, கதைகளின் கருத்து முதலியவை எளிதில் பதிந்து விடும்.

5. உபகரணங்கள் உபயோகித்தல் : கதைகளின் போது உபகரணங்களை உபயோகித்தால் ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் சிறுவர்கள் கேட்பர், ரசிப்பர். ஒவ்வொரு வாரமும் ஏதாவது ஒரு உபகரணமாவது உபயோகித்தல் அவசியம்.

6. மனப்பாடம் : சிறு வயதில் வசனத்தை மனப்பாடம் செய்வது அவர்கள் பெரியவர்களாகும்போது அவர்கள் வாழ்க்கையில் ஆறுதல் அளிக்கிறது. அதனால் வசனங்களை வெறுமையாக மனனம் செய்யாமல், அதின் கருத்தை அறிந்து, வாழ்க்கையில் எப்படி செயல்படுத்தலாம்? என்றும் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

7. தனி நபர் ஆலோசனை : ஞாயிறுபள்ளி பிள்ளைகளை தனியே சந்தித்து அவர்களது குறைகள், பிரச்சனைகள் ஆகியவற்றை அறிந்து அவற்றில் அவர்களுக்கு உதவினால் மிக்க நல்லது.

குழந்தைகள் இயேசுவுக்கே ஊழியங்கள்
80, மார்க்கெட் தெரு,
நாசரேத் - 628 617.
போன் : 954639 278344